# தமிழ் நாடு

திங்களிதழ்

இதழ் - 28 | தமிழ்நாட்டு மக்களின் உரிமைக் குரல் | நன்கொடை உரு.20


## வேளாண் மண்டலப் பாதுகாப்பை உறுதிசெய்வோம்!

# மண்ணின் மக்களின் நடை பயணம்

## செப்டம்பர் 24 முதல் 29 வரை

# பூம்புகார் முதல் தஞ்சை வரை

### நம்மைக் காப்பாற்ற விண்ணில் இருந்து எவரும் குதித்து வரமாட்டார்கள்!

### நம் ஊரை நாம்தாம் காப்பாற்றியாக வேண்டும்!

**மண்ணின் மக்களின் நடைபயணம் ஏன்?**

காவிரிப் படுகை பெருமக்களே, மீத்தேன் திட்ட எதிர்ப்புக் கூட்டமைப்பு செப்டம்பர் 24 முதல் செப்டம்பர் 29 வரை பூம்புகார் கடற்கரையிலிருந்து தஞ்சை வரை மண்ணின் மக்களின் நடை பயணத்தை முன்னெடுத்துள்ளது. காவிரிப் படுகையைப் பாதுகாப்பதன் தேவை குறித்து மக்களிடம் விழிப்புணர்வை உருவாக்குவதற்கும், தமிழ்நாடு அரசிடம் சில கோரிக்கைகளை வலியுறுத்துவதற்கும் இந்நடை பயணம் முன்னெடுக்கப்படுகிறது.

**காவிரிப்படுகை : அழியும் நிலையில் தமிழ்நாட்டின் நெற்களஞ்சியம்**

தமிழ்நாட்டின் உணவுத் தேவையில் முன்பு 60%, இன்று 34% நிறைவு செய்யும் உணவுக் கலம்; தமிழர் நாகரிகம் தோன்றி செழித்த வரலாற்றுச் சிறப்புமிக்க தாய்மண். கொள்ளிடம் கூட்டுக் குடிநீர் திட்டத்தின் மூலம் பல மாவட்டங்களுக்குக் குடிநீரை காவிரிப் படுகைதான் வழங்கி வருகிறது. காவிரிப்படுகை இருக்கும் வரை தமிழ்நாடு தலைநிமிர்ந்து வாழும். காவிரிப்படுகை அழிந்தால் தமிழ்நாடு உணவுக்குக் கையேந்தும்.

**தொடரும் இரண்டு குறைபாடுகள்!**

காவிரிப்படுகையைப் பாதுகாக்கும் நோக்குடன் 2020-இல் இயற்றப்பட்ட தமிழ்நாடு பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டல மேம்பாட்டுச் சட்டத்தில் இரண்டு முதன்மைப் போதாமைகள் இருக்கின்றன. அவை,

(1) காவிரிப்படுகை முழுவதும் பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலப் பகுதிக்குள் கொண்டுவரப்படவில்லை.

(2) இதுவரை காவிரிப்படுகையைப் பாழாக்கிய பழைய திட்டங்கள் தடுத்து நிறுத்தப்படவில்லை.

இந்த இரண்டு குறைபாடுகளும் உடனடியாக நீக்கப்படுவது தேவையானது ஆகும்.

தஞ்சை, திருவாரூர், மயிலாடுதுறை, நாகை மாவட்டங்களும், கடலூர் மாவட்டத்தில் 5 வட்டங்களும், புதுக்கோட்டை மாவட்டத்தில் 5 வட்டங்களும் மட்டுமே பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலமாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. கூடுதலாக, கடலூர் மாவட்டம் முழுவதும், அரியலூர் மாவட்டம், திருச்சி மாவட்டம், புதுக்கோட்டை மாவட்டம் ஆகியவையும் பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலத்திற்குள் கொண்டுவரப்பட வேண்டும்.

காவிரிப் படுகையில் சோழர்கள் காலத்திலும், விசயநகரப் பேரரசு மற்றும் ஆங்கிலேயர்கள் காலத்திலும் மிகச் சிறப்பான நீர்ப்பாசனக் கட்டமைப்பு உருவாக்கப்பட்டது. ஆனால் இக்கட்டமைப்பு இப்போது ஓரளவு சிதைக்கப்பட்டுள்ளது. வெள்ளத்தைச் சேமித்துப் பயன்படுத்தத் திட்டங்கள் தேவை. மேட்டூரில் திறக்கப்படும் நீர் நாமக்கல், ஈரோடு, கரூர், திருச்சி, தஞ்சாவூர், திருவாரூர், மயிலாடுதுறை, நாகப்பட்டினம் வழியாகப் பாய்ந்து 17 இலக்கம் குறுக்கம்*(ஏக்கர்)* நிலத்தை வளப்படுத்துகிறது. 15 மாவட்டங்களுக்கு குடிநீராகப் பயன்படுகிறது. குறுவை, சம்பா, தாளடி என முப்போகத்திற்கு எட்டு மாதத்திற்கு 350 டி.எம்.சி நீர் தேவை. முறையான நீர் மேலாண்மை மூலம் இந்நீரை நம்மால் சேமிக்க முடியும். நீர் நிலைகள், வாய்க்கால்கள், கால்வாய்கள் ஆகியவற்றில் ஆக்கிரமிப்பு நீக்கம், மராமத்துப் பணிகள், முறையான நீர் மேலாண்மை ஆகியவற்றின் மூலம் காவிரிப்படுகை முழுவதையுமே வேளாண்மை செழிக்கும் மண்டலமாக மாற்ற முடியும்.

காவிரிப் படுகையில் விளைநிலப் பரப்பு குறைந்து வருகிறது. வளமான விளைநிலங்கள் வீட்டுமனைகளாக மாற்றப்படுகின்றன. ஆயிரக் கணக்கான குறுக்கங்கள்(ஏக்கர்கள்) பெரும் தொழில் நிறுவனங்களுக்கு விற்கப்படுகின்றன. வேளாண் மண்டலம் தொழில் மண்டலமாக மாறும் அச்சம் காத்திருக்கிறது. காவிரிப் படுகை மாவட்டங்களில் வேலை வாய்ப்பு

உருவாக்கம் என்ற பெயரில் வேளாண்மையை ஒழித்து தொழிற்பேட்டைகளை நிறுவமுற்படுவது காவிரிப் படுகையை அழித்து விடும் என எச்சரிக்கிறோம்!

## தொடரும் எண்ணெய் - எரிவாயுத் திட்ட அச்சுறுத்தல்!

காவிரிப் படுகையைப் பாதுகாக்கும் நோக்கத்துடன், தமிழ்நாடு பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டல மேம்பாட்டுச் சட்டம் - 2020 இயற்றப்பட்டது. இச்சட்டம் புதிய ஐட்ரோகார்பன் கிணறுகள் அமைப்பதை தடை செய்துவிட்டது. ஆனால் பழைய எண்ணெய் வாயுத் திட்டங்கள் தொடர்வதைத் தடை செய்யவில்லை. இதனால் பழைய கிணறுகளில் மராமத்து செய்வதாகக் கூறிக்கொண்டு, மிகப்பெரும் விரிவாக்கத் திட்டங்களை நடைமுறைப்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இவை வெறும் பராமரிப்பு வேலைகள் அல்ல. இப்போது முன்னெடுக்கப்படும் மராமத்து புதிய வேலைகள், விரிவாக்கம், நவீன மயமாக்கம் ஆகியவற்றை உள்ளடக்கியது! ஆகவே இவ் வேலைகள் சட்டவிரோதமானவை.

கச்சா எண்ணெய்க் கிணறுகளும் குழாய்களும் 15 ஆண்டுகளில் அரிமானத்திற்கு உள்ளாகும். இவை நிலத்தடியில் சிதைவுற்று, அரித்துப் போய், இரவு பகலாகக் கசிவுகளை வெளியிட்டுக் கொண்டே இருக்கின்றன. பல பகுதிகளில் நிலத்தடி நீரில் கச்சா எண்ணெய் கலந்து விவசாயத்திற்கான ஆழ்துளைக் கிணறுகள் வழியே கச்சா எண்ணெய் கலந்த நீர் வெளியேறிக் கொண்டிருக்கிறது. சில ஆயிரம் அடி ஆழத்தில் உள்ள, கடல் நீரை விடவும் உப்புத்தன்மையுள்ள நீர், எண்ணெய் - எரிவாயுக் கிணறுகள் அமைப்புச் செயல்பாடுகளால், உப்பு நீருக்கும் நன்னீருக்கும் இடையில் இருக்கும் பாறைத் தடுப்புகள் உடைக்கப்பட்டு விட்டதால், நிலத்தடி நன்னீர் தொகுப்பில் கலந்து கொண்டிருக்கிறது. எதிர்காலத்தில் நிலத்தடி நீரை முற்றிலுமாக நாம் பயன்படுத்த முடியாமல் போகும்.

நிலம் கெட்டது, நீர் கெட்டது, எண்ணெய்க் கிணறுகள் அமைந்துள்ள பகுதிகளில் மக்களின் உடல்நலம் கெட்டது. தோல் நோய், புற்றுநோய், மலட்டுத்தன்மை, மருந்தே இல்லாத நோய்கள் எனப் பாதிப்புகளை இப்போது உணர்கிறோம். கடந்த காலத்தில் எந்த எண்ணெய்க் கிணறுகள் நம் நிலத்தையும் நீரையும் பாழாக்கியதோ, அவை இன்றுவரை தொடர்ந்து பாழாக்கிக் கொண்டிருக்கின்றன. வேளாண் மண்டலத்தில் எண்ணெய் - எரிவாயுத் திட்டங்கள் முற்றிலுமாக நிறுத்தப்பட வேண்டும்!

## கூடுதல் அழிவுகள்!

பழைய எண்ணெய்க் கிணறுகளின் உள்ளே, 1500 மீட்டர் ஆழத்தில் தொடங்கி, பக்கவாட்டில் சாய்வாக "சைடு ட்ராக்கிங்" (Side Tracking) என்ற பெயரில் புதிதாகக் குழாய்களை அமைத்து, 3000 மீட்டர் ஆழத்திற்குக் கிணறுகளை அமைத்து சேல் என்ற களிப்பாறை வரை குழாய்களைச் செலுத்தி எண்ணெய் - எரிவாயு எடுக்கும் திட்டம் இருக்கிறது. அஞ்சத்தகுந்த வேதியல்களைப் பயன்படுத்தும் "புதிய தொழில்நுட்பம்" இல்லாமல் இதைச் செய்ய முடியாது!

இந்தத் தொழில்நுட்ப முறை தமிழ்நாட்டில் தடை செய்யப்பட்ட ஒன்று.

* எண்ணெய் - எரிவாயுத் திட்டங்களால் காவிரிப்படுகை அடைந்த பாதிப்புகள் பற்றி ஆய்வு செய்ய 2021 - இல் தமிழ்நாடு அரசு நியமித்த பேராசிரியர் சுல்தான் இஸ்மாயில் நிபுணர் குழு 2022 - இல் ஆய்வறிக்கையை சமர்ப்பித்து விட்டது. சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வறிக்கையைத் தமிழ்நாடு அரசு உடனடியாக வெளியிட வேண்டுகிறோம்!

* காவிரிப்படுகை முழுவதையும் பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலச் சட்டம் 2020 - இன் பாதுகாப்புக்குள் கொண்டு வர வேண்டும் என்று கோருகிறோம். தமிழ்நாடு அரசு காவிரிப்படுகை மட்டுமின்றி, தமிழ்நாட்டின் பிற பகுதிகளையும் அழிவிலிருந்து காக்க வேண்டும்!

* கடற்பகுதியில் எண்ணெய் வளத்தை மதிப்பீடு செய்ய "சீஸ்மிக் ஆய்வு". என்பதை நடத்துவார்கள். இதில் இடைவிடாமல் வெடிபொருட்கள் வெடிக்கப்படும். இதனால் கடல்வாழ் உயிரினங்களின் நுண்ணுணர்வு உறுப்புகள் சிதைவுற்று, மீன் இனம் அழிந்து போகும். மீன்கள், கடற்பசு, ஆமைகள் அழிந்து போகும் அல்லது இடம்பெயர்ந்து வேறு இடம் சென்று விடும். தமிழ்நாட்டின் மீன்வளத்தையும், கடற் தொழிலையும், மீனவர்களின் வாழ்வாதாரங்களையும் காக்க, நிலப்பகுதியில் மட்டுமின்றி, கடற்பகுதியிலும் ஐட்ரோகார்பன் திட்டங்களைத் தடை செய்வதற்குத் தமிழ்நாடு அரசு நடவடிக்கைகளைக் கைக்கொள்ளவேண்டும்.

* ஐட்ரோகார்பன் கிணறுகள் செயல்பட்டால் நிலத்தடி நீர் கீழே இறங்கி விடும்.
* நிலத்தட்டுகள் நகரும். இதனால் நில அதிர்வு, பூகம்பங்கள் ஏற்படும்.
* நிலத்தடியில் உள்ள உப்பு நீரும் மேற்பகுதியில் இருக்கக்கூடிய நல்ல நீரும் ஒன்றாகக் கலந்து, பயன்படுத்த முடியாத நீராக மாறும்.

## காவிரிப்படுகை கடலில் மூழ்கும் அச்சம்!

புவி வெப்பமயமாதலால் பனிப்பாறைகள் உருகி கடல் மட்டம் உயர்ந்து கொண்டிருக்கின்றன. 2100 - இல் உலக அளவிலும் இந்தியாவிலும் பல கடற்கரையோர நகரங்கள் கடலில் மூழ்கப் போகின்றன. 2060 இல் சென்னை நிலப்பரப்பில் 114 சதுர கிலோமீட்டர் கடலில் மூழ்கும் என ஆய்வாளர்கள் அதிர்ச்சி செய்தியை வெளியிட்டுள்ளனர். காவிரிப் படுகை என்ன ஆகும்? காவிரிப் படுகையிலும் எண்ணெய் - எரிவாயு பெருமளவு நீருடன் தொடர்ந்து வெளியேற்றப்படுவதால், நிலத்தின் கீழே ஏற்படும் வெற்றிடத்தைச்சரி செய்ய நிலம் கீழ்நோக்கித் தாழ்கிறது. காவிரிப் படுகையில் 75% நிலப்பரப்பு நிலம் தாழ்ந்து கடலுள் மூழ்கும் நிலையை அடைந்திருக்கிறது என்று டைம்ஸ் ஆப் இந்தியா (Times of India,19 July 2023) ஆங்கில இதழ் தெரிவிக்கிறது.

*காவிரிப்படுகையின் அழிவு இரண்டு பங்கு வேகத்தில் நிகழ்ந்து கொண்டிருக்கிறது*. ஒருபுறம், காவிரிப் படுகையின் நிலப்பரப்பு மேலும் மேலும் கீழ்நோக்கித் தாழ்ந்து கொண்டிருக்கிறது; அதே நேரம், கடல் மட்டம் உயர்ந்து கொண்டிருக்கிறது. காவிரிப்படுகையின் பெரும் பகுதி கடல் மட்டத்தை விட ஒரு மீட்டர் அல்லது மூன்று அடி உயரத்திலேயே இருக்கிறது. இது தொடர்ந்தால், காவிரிப்படுகையை, நம் வாழ்விடத்தை நாம் காப்பாற்ற முடியாது.

* காவிரிப்படுகையைக் காக்க இருக்கும் ஒரே வழி, காவிரிப்படுகை மேலும் தாழ்ந்து போகாமல் தடுத்து நிறுத்த வேண்டும். இதற்கு காவிரிப் படுகை முழுவதையும் பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலமாக மாற்றி, விவசாயத்தையும், விளை நிலங்களையும், நீர்நிலைகளையும் பேணுவதுதான். விளைநிலங்கள் விளைநிலங்களாகவே தொடர வேண்டும். காவிரி படுகையில் வேளாண்மையையும் வேளாண்மை சார்ந்த தொழில்களையும் தவிர வேறு எவ்வகைத் தொழிலகங்களையும் அனுமதிக்கக் கூடாது.

* பெட்ரோலை இறக்குமதி செய்து வாழ்ந்து விட முடியும்! குடிநீரை இறக்குமதி செய்து வாழ முடியுமா? பெட்ரோலும் எரிவாயுவும் நமக்குத் தேவைதான். ஆனால் குடிநீர் அதைவிட முக்கியம் அல்லவா?

* நீரை இழந்து, விவசாயத்தை அழித்து, அகதிகளாக வெளியேறித், தமிழகம் அல்லாத பிரதேசங்களில் அகதிகளாக நாம் வாழ முடியுமா?
* நம்மைக் காப்பாற்ற விண்ணில் இருந்து எவரும் குதித்து வரமாட்டார்கள்! நம் ஊரை நாம்தாம் காப்பாற்ற வேண்டும்!
* மக்கள் விழித்தெழ வேண்டும்! தமிழ்நாடு அரசு நம் கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டும்.

### பூம்புகார் - தஞ்சை நடைப்பயண வழித்தடம்
### நாட்கள் 24.09.2024 -- 29.09.2024

24.9.2024

**பூம்புகார் தொடக்க நிகழ்ச்சி திருநகரி, பழையபாளையம், மாதானம், புத்தூர்**
**சீர்காழி -மாலைப் பொதுக்கூட்டம்**

**25.09.2024**

**சீர்காழி, வைத்தீசுவரன் கோயில், திருநன்றியூர், சோழச்சக்கர நல்லூர்,**
**மயிலாடுதுறை - மாலைப் பொதுக்கூட்டம்**

**26.09.2024**

**மயிலாடுதுறை, கதிராமங்கலம்,, நரசிங்கம்பேட்டை**
**குத்தாலம் - மாலைப் பொதுக்கூட்டம்**

27.09.2024

**குத்தாலம், ஆடுதுறை, திருவிடைமருதூர்**
**கும்பகோணம் - மாலைப் பொதுக்கூட்டம்**

28.09.2024

**கும்பகோணம், சுவாமிமலை,**
**பாபநாசம் - மாலைப் பொதுக்கூட்டம்**

29.09.2024

**பாபநாசம், இராசகிரி, அய்யம்பேட்டை,**
**தஞ்சாவூர் - நிறைவுப் பொதுக்கூட்டம்.**

# மீத்தேன் திட்ட எதிர்ப்புக் கூட்டமைப்பு வேளாண் மண்டலப் பாதுகாப்பை உறுதி செய்வோம்!

'Save Cauvery Delta Agri . Zone'

# மண்ணின் மக்களின் நடை பயணம்

## (24 செப்டம்பர் முதல் 29 செப்டம்பர் வரை) பூம்புகார் முதல் தஞ்சை வரை

**கோரிக்கைகள்:**

1) காவிரிப்படுகை முழுவதையும் பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலச் சட்டவரம்புக்குள் கொண்டு வர வேண்டும். கடலூர் மாவட்டம் முழுவதும், அரியலூர் மாவட்டம், திருச்சி மாவட்டம், புதுக்கோட்டை மாவட்டம் ஆகியவையும் வேளாண் மண்டலமாக அறிவிக்கப்பட வேண்டும்.

2) காவிரிப்படுகையில் வேளாண்மை மற்றும் வேளாண்மை சார்ந்த தொழில்கள் மட்டுமே நடைபெற வேண்டும். வேளாண் மண்டலம் தொழில் மண்டலமாகக் மாறக்கூடாது.

3) விளைநிலங்கள் விளைநிலங்களாகவே தொடர பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டல மேம்பாட்டுச் சட்டத்தில் திருத்தம் செய்யப்பட வேண்டும்.

4) காவிரிப்படுகை வேளாண் மண்டலத்தில் பழைய எண்ணெய் - எரிவாயுக் கிணறுகளின் காலத்தை உறுதி செய்து, கிணறுகளின் அடிப்படை ஆவணங்கள் மற்றும் செயல்படத் தேவையான அனுமதிகள் ஆகியவற்றை ஆய்வு செய்து, சட்டவிரோதக் கிணறுகள் உடனடியாக மூடப்பட வேண்டும்.

5) தொழிலக அனுமதிகள், எண்ணெய் எரிவாயுத் திட்டங்கள் தொடர்பான மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தின் செயல்பாடுகள் நெறிப்படுத்தப்பட வேண்டும்.

6) எண்ணெய் எரிவாயுத் திட்டங்களால் காவிரிப்படுகை அடைந்த பாதிப்புகள் குறித்த பேராசிரியர் சுல்தான் இஸ்மாயில் ஆய்வு அறிக்கை உடனடியாக வெளியிடப்பட வேண்டும்.

7) தமிழகக் கடற்பகுதியில் மீன்வளத்தையும், மீன் பிடித் தொழிலையும், தமிழக மீனவர்களின் வாழ்வாதாரங்களையும் காப்பதற்காக, கடற்பகுதியிலும் எண்ணெய் - எரிவாயுக் கிணறுகள் அமைப்பதைத் தடை செய்ய வேண்டும்.

8) விளைநிலங்களின் குறுக்கே எண்ணெய் - எரிவாயுக் குழாய்கள் அமைப்பதைத் தடை செய்ய வேண்டும்.

9) காவிரிப்படுகையில் உள்ள ஏரி, குளம், பாசனக் கால்வாய்கள் மற்றும் வடிகால் வாய்க்கால்களில் உள்ள ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டு, நீர்நிலைகள் மீட்கப்பட வேண்டும். காவிரிப்படுகை முழுவதும் நீர்ப் பாசனக் கட்டமைப்பு, நீர் மேலாண்மைச் செயல்பாடுகள் மேம்படுத்தப்பட வேண்டும்.

(10 ) கனிம வளங்கள் மீது வரி விதிக்க மாநில அரசுகளுக்கே உரிமை உள்ளது என்று உச்சநீதிமன்ற அரசமைப்பு அமர்வு 25.7.2024 அன்று தீர்ப்பளித்துள்ளது. தமிழ்நாட்டின் கனிமங்களின் மீதான வரி விதிப்புக் கொள்கையைத் தமிழ்நாடு அரசு வகுக்க வேண்டும். கனிமவளச் சூறையைத் தடுத்து நிறுத்தி, தமிழ்நாட்டின் இயற்கை வளம் மற்றும் கனிம வளத்தைப் பாதுகாக்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்

**மீத்தேன் திட்ட எதிர்ப்புக் கூட்டமைப்பு**

**19/2, சேந்தங்குடி வடக்குத் தெரு, மயிலாடுதுறை - 609 001**

தொடர்புக்கு: பேராசிரியர் **த.செயராமன்,** தலைமை ஒருங்கிணைப்பாளர் 9842007371

## மண்ணின் மக்களின் நடை பயணம்!

**(24 செப்டம்பர் முதல் 29 செப்டம்பர் வரை)**

---

*காலை : தொடக்க நிகழ்வு :*

நடை பயணக் குழுத் தலைவர் மற்றும் நோக்க உரை :
பேராசிரியர் **த.செயராமன்,** தலைமை ஒருங்கிணைப்பாளர், மீத்தேன் திட்ட எதிர்ப்புக் கூட்டமைப்பு
நடைப்பயணத்தைத் தொடங்கி வைப்பவர்:
தோழர் **பொழிலன்,** தமிழக மக்கள் முன்னணி
சிறப்பு அழைப்பாளர்கள்: திரு.**க. நாகேசுவரன்,** முகவை மாவட்ட ஒருங்கிணைப்பாளர், மீத்தேன் திட்ட எதிர்ப்புக் கூட்டமைப்பு
தோழர் **பாவெல்** இனங்களின் இறையாண்மைக்கான இளைஞர் மாணவர் இயக்கம்

*24.09.2024- மாலை நேரக் கூட்ட நிகழ்ச்சிகள்:*

*மாலை - சீர்காழி :*
சிறப்பு அழைப்பாளர்கள் :
தோழர் **கோவை கு. இராமகிருட்டிணன்,** தந்தை பெரியார் திராவிடர் கழகம்
தோழர் **பொழிலன்,** தமிழக மக்கள் முன்னணி
தோழர் **வன்னி அரசு,** துணைப்பொதுச் செயலாளர், வி. சி. க.
திரு.க. **நாகேசுவரன்,** முகவை மாவட்ட ஒருங்கிணைப்பாளர், மீத்தேன் திட்ட எதிர்ப்புக் கூட்டமைப்பு
தோழர் **பாவெல்**
இனங்களின் இறையாண்மைக்கான இளைஞர் மாணவர் இயக்கம்

---

*25.09.2024 மாலை மயிலாடுதுறை :*
சிறப்பு அழைப்பாளர்கள் :
ஐயா **கொளத்தூர் மணி,**
தலைவர், திராவிடர் விடுதலைக் கழகம்
திரு. **றி. அப்துல் சமது**, சட்ட மன்ற உறுப்பினர், மாநிலப் பொதுச் செயலாளர், மனிதநேய மக்கள் கட்சி
திரு.**ம. சிந்தனைச் செல்வன்** ச.ம.உ., விடுதலைச் சிறுத்தைகள் கட்சி
திரு. **அபுபக்கர் சித்திக்** மாநிலச் செயலாளர், எஸ். டி. பி. ஐ
தோழர் **தி. சித்தார்த்தன்,** பொதுச் செயலர், மா பெ பொ க

---

*26.09.2024 மாலை : குத்தாலம்:*
சிறப்பு அழைப்பாளர்கள் :
பொறியாளர் **மு. செந்திலதிபன்,** பொருளாளர், ம.தி.மு.க.
தோழர் **திருமுருகன் காந்தி,** மே 17 இயக்கம்
வழக்கறிஞர் **வெற்றிச் செல்வன்**, பூவுலகின் நண்பர்கள்

---

*27.09.2024 மாலை கும்பகோணம்:*
சிறப்பு அழைப்பாளர்கள் :
தோழர் **திருமுருகன் காந்தி** மே 17 இயக்கம்
திரு. **அபூபக்கர் சித்திக்** மாநிலச் செயலாளர், எஸ்.டி.பி.ஐ கட்சி
தோழர் **குடந்தை அரசன்,** தலைவர், விடுதலை தமிழ்ப் புலிகள் கட்சி
தோழர் **நிலவழகன்** மக்கள் தமிழகம் கட்சி
பொறியாளர் சுந்தர்ராசன் பூவுலகின் நண்பர்கள்

---

*28.09.2024 மாலை பாபநாசம்*
சிறப்பு அழைப்பாளர்கள் :
பேராசிரியர் **வி.பி. ஜவாஹிருல்லாஹ்** ச.ம.உ., தலைவர், ம.ம.க.
தோழர் **நாகை. திருவள்ளுவன்,** தலைவர், தமிழ்ப் புலிகள் கட்சி
பேராசிரியர் **சுப. உதயகுமாரன்** பச்சைத் தமிழகம் கட்சி.
தோழர் **நிலவன்**, நீரோடை, ஈரோடு
ஐயா **காஞ்சி அமுதன்,** பாலாறு பாதுகாப்பு இயக்கம்

---

*29.09.2024 மாலை தஞ்சாவூர்:*
சிறப்பு அழைப்பாளர்கள் :
ஐயா **பழ. நெடுமாறன்,** தலைவர், உலகத் தமிழர் பேரமைப்பு
திரு.**நெல்லை முபாரக்,** தலைவர், எஸ்.டி.பி.ஐ. கட்சி
வழக்கறிஞர் **அ.நல்லதுரை,** தலைமை ஆலோசகர், மீத்தேன் திட்ட எதிர்ப்புக் கூட்டமைப்பு
வழக்கறிஞர் **த.சு. கார்த்திகேயன்,** தமிழ்த்தேசிய முன்னேற்றக் கழகம்
வழக்கறிஞர் **ஜோசப் கென்னடி,** திருச்சி
தோழர் **கி.வே. பொன்னையன்,** செயற்குழு உறுப்பினர், ஐக்கிய விவசாயிகள் முன்னணி
தோழர் **அம்பேத்கர்,** மாநில ஒருங்கிணைப்பாளர், விவசாயிகள் விடுதலை முன்னணி
தோழர் **தங்க . குமரவேல்,** தமிழ்நாடு மக்கள் விடுதலை இயக்கம்

# நம் நாடு தமிழ்நாடு!
# தாயக நாளைக் கொண்டாடு!
# தமிழ்நாடு நாள் விழா

மிக நீண்ட நெடிய பல ஆயிரம் ஆண்டுகளுக்கும் மேலான அரசு சார்ந்த பெரும் நிலப்பரப்பாகத் தமிழ் வழங்கும் நல்லுலகம் என்கிற அளவில் தமிழ்நாடு அரசு உருவாக்கம் பெற்றிருந்தது.. பல்வேறு வந்தேறி ஆட்சிகளின் கீழ் அடங்கப்பட்டுக் கிடந்த தமிழ்நாடு, பிரித்தானியருக்கு அடிமைப்பட்டப் பின்னர் இறுதியாக இந்திய அரசு உருவாக்கத்திற்குள் அடைக்கப்பட்டு விட்டது..

இந்திய அதிகார அரசுக்கு அடிமைப்பட்டுப்போன தமிழ்நாடு மீண்டும் தன்னைத் தமிழ்நாடு என்கிற அளவில் மாற்றிக் கொள்ள அரும்பாடுபட்டது..

தமிழ்நாட்டிற்கெனத் தனிக் கொடியை உருவாக்கவும், தமிழ்நாட்டிற்கென ஒரு நாளை அமைத்துக் கொண்டு பெருவிழா நடத்தவும் வழியற்றுப் போனது..

தமிழ் ஆர்வலர்களின் அறிஞர்களின் பெரு முயற்சிகளுக்குப் பின்னர் சில அடையாளங்கள் பெறப்பட்டாலும் தமிழ்நாடு நாள் விழாவை அரசு விழாவாக, மக்கள் விழாவாகக் கொண்டாடுகிற ஒரு பேரெழுச்சி நாள் அறிவிக்கப்பட வேண்டும்.

கடந்த 30 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே தமிழ்ச் சான்றோர் பேரவை உள்ளிட்ட எண்ணற்ற தமிழ் இயக்கங்கள் தமிழ்நாடு நாள் விழாவாக நவம்பர் 1 ஆம் நாளைத் தமிழகமெங்கும் அளாவி நடத்தி வந்தன. குமரி மாவட்டம் தமிழ்நாட்டோடு இணைந்த நாளாக நவம்பர் ஒன்றாம் நாள் குமரி மாவட்டம் முழுமையும் விழாக் கோலம் கொள்கிறது. கடந்த 5 ஆண்டுகளாகப் **பெரியாரிய உணர்வாளர்கள் கூட்டமைப்பு** நவம்பர் 1 -ஆம் நாளைத் தமிழ்நாடு நாள் என்பதாகப் பெரிய அளவில் கொண்டாடி வந்திருக்கிறது..

தமிழ்நாட்டிற்கெனத் தனிக் கொடி ஒன்று தேவை என வலியுறுத்தி, பெரியாரிய உணர்வாளர்கள் கூட்டமைப்பின் நூற்றுக்கும் மேற்பட்ட இயக்கங்கள் ஒன்றுகூடி வெள்ளை நிறக் கொடியில் சிவப்பு நிறத்தில் தமிழ்நாடு நிலப்படம் அமைந்துள்ளதான கொடியை முன் மொழிந்து அறிவிப்புச் செய்து அதையே தாங்கியபடி விழா கொண்டாடப் பெறுகிறது..

தமிழ்நாடு ஒரு நாடாக, ஓர் அரசாக, தமிழ் இனம் ஓர் இனமாக அடையாளப்படுத்திக்கொள்ள இயலாத நிலையில் இந்திய அரசு பெரும் தடையாக உள்ளது.. அதிலும் ஆரியப் பார்ப்பனிய பாசிச வெறி கொண்ட பாஜக இந்தியத் துணைக்கண்டத்திலுள்ள மொழித் தேசங்களின் - மாநிலங்களின் அடையாளங்களையே சிதைக்கிறது.. மொழியை, பண்பாட்டை, வரலாற்றை அழிக்கிறது.. இந்நிலையில் மொழித் தேசங்கள் தங்களைத் தற்காத்துக் கொள்வது கட்டாயமாகின்றது.
எனவேதான் ஒவ்வொரு மொழி மாநிலமும் தங்களது மாநிலத்துக்கான நாளைப் பெரிய அளவில் கொண்டாடுகின்றன..

கருநாடக அரசு தங்கள் மாநிலத்தில் - மிகச் சிறப்பாக இவ்விழாவை நடத்தி வருகிறது.. தங்களுக்கென்று தனிக்



கொடியை அடையாளப்படுத்தி அரசு அலுவலகங்களின் முன்புறத்தில் ஏற்றுகிறது..

மிசோரம், நாகலாந்து, கேரளம், ஆந்திரம் எனப் பெரும்பாலான மாநிலங்களில் அந்தந்த மாநிலங்களில் தோற்ற நாள் விழாக் கொண்டாட்டங்கள் நடத்தப் பெறுகின்றன..

நாமும் தமிழ்நாட்டளவில் மிகவும் சிறப்பாகக் கொண்டாடியாக வேண்டும்.. சூலை 18 - ஐத் தமிழ்நாடு பெயர் சூட்டப்பட்ட நாள் என்றும், நவம்பர் 1 - ஐத் தமிழ் நாடு நாள் என்றும் தமிழர்கள் மிகவும் மகிழ்ச்சியாகக் கொண்டாடிட வேண்டும்.. நம் அடையாளங்களை மீட்டாக வேண்டும்..

அவ்வகையில்..
வரும் 2024 - நவம்பர் ஒன்றாம் நாளைத் தமிழ்நாடு நாள் விழாவாகத் தமிழக மக்கள் முன்னணி பெரம்பலூரில் கொண்டாடுகிற வகையில் அனைவரையும் ஒருங்கிணைக்கிறது..

தமிழ் இயக்கங்கள், தமிழ்த் தேசிய இயக்கங்கள், பெரியாரிய உணர்வாளர்கள் - இயக்கங்கள், அம்பேத்கரிய உணர்வாளர்கள் - இயக்கங்கள், மார்க்சிய உணர்வாளர்கள் - இயக்கங்கள், பெண்ணியம் மற்றும் சூழலியல் இயக்கங்கள் என அனைவரையும் ஒருங்கிணைத்துக் கொண்டாட அழைக்கிறது..

கலை நிகழ்வுகளோடும்..
கருத்துக் குவியல்களோடும்..
பரப்பல் பேரணியோடும்..
விழாக் கோலம் பூணு7கிறது பெரம்பலூர்..

எதிர்வரும் நவம்பர் 1
வெள்ளிக்கிழமை
பிற்பகல் 2 மணி முதல்
ஒன்பது மணி வரை..

பெரம்பலூரில் நடைபெறும்
கொண்டாட்டப் பேரெழுச்சி
தமிழ்நாடெங்கும் ஒளி பரப்பட்டும்..

தமிழ்நாடு நம் நாடு..!
தாயக நாளைக் கொண்டாடு..!

# உள் இடஒதுக்கீடு

தங்க. குமரவேல்
தமிழ்நாடு மக்கள் விடுதலை இயக்கம்

இடஒதுக்கீடு என்பது ஆகக்கீழாக ஒடுக்கப்பட்டவர்களின் உரிமையாகும். இந்தியாவில் படிநிலை அமைப்பில் சாதிகள் உள்ளதால் இடஒதுக்கீடும் அதற்கேற்பத் தேவைப்படுகிறது.

ஒரே நிலையில் ஒடுக்குமுறைகளைச் சந்திக்கும் பல்வேறு சாதிகளின் பட்டியலை ஒழுங்குபடுத்தி அட்டவணைப் பழங்குடிகள், அட்டவணை வகுப்பினர், சீர்மரபினர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், பிற்படுத்தப் பட்டோர், முன்னேறிய வகுப்பினர் என அரசு தொகுப்புப் பட்டியல் தயாரித்துள்ளது.

தற்போது நிலவுகிற இடஒதுக்கீட்டு முறை ஒடுக்கப்படும் வகுப்பினருக்கு ஓரளவு பயனுடையதாக இருக்கிறது. ஆனால் இதுவே முழுமையானது அல்ல. ஏனெனில் 97 விழுக்காடு மக்கள் தொகையுள்ள முற்பட்ட சமூகம் அல்லாதவர்களுக்கு இடஒதுக்கீடு வெறும் 50 விழுக்காடு மட்டுமே உள்ளது. பொதுப்பிரிவு என்ற பெயரில் மீதமுள்ள 50 விழுக்காடு இடங்கள் 3 விழுக்காடு மக்கள் தொகை கொண்ட முன்னேறிய வகுப்பினர் பயன்படும் வகையிலேயே உள்ளது. இதுவே மிகப்பெரிய அநீதியாகும்.

இடஒதுக்கீடு குறித்து நமது நிலைப்பாடு என்னவென்றால், அது 100 விழுக்காடாக ஆக்கப்பட வேண்டும். அதில் 3 விழுக்காடு முன்னேறிய வகுப்பினருக்கும் மற்ற 97 விழுக்காடு பெரும்பான்மை மக்களுக்கும் ஒதுக்கப்பட வேண்டும். அதில் சாதிவாரியாக மக்கள் தொகைக் கணக்கெடுப்பை நடத்தி எல்லா பட்டியலிலிருந்தும் சில குறிப்பிட்ட சாதிகளே பயன்பெறும் நிலைக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். இடஒதுக்கீடு என்பது சாதி ஒழிப்பிற்கான முன்னெடுப்பின் ஒரு பகுதியாகும். ஆனால் அதுவே சாதியை ஒழித்துவிடாது. அதற்குச் சாதி மறுப்புத் திருமணம் செய்தோருக்கான சாதி அற்றோர் என்னும் புதுப் பட்டியலை உருவாக்கி அவர்களின் மக்கள் தொகைக்கு ஏற்ப இடஒதுக்கீடு வழங்கப்பட வேண்டும்.

இடஒதுக்கீட்டில் உள் ஒதுக்கீடு, பொருளாதார ஒதுக்கீடு தொடர்பாக எழும் சிக்கல்களுக்கு முழு காரணம் இப்போதுள்ள அநீதியான இடஒதுக்கீட்டு முறையேயாகும். 50 விழுக்காடு இடங்களைப் பொதுப்பிரிவு என்னும் பெயரால் முற்பட்ட வகுப்பினருக்குத் தகுதி, திறமை என்னும் பெயரால் தாரைவார்த்துவிட்டு மீதமுள்ள 50 விழுக்காட்டை 97 விழுக்காடு மக்கள் பிரித்துக் கொள்வதற்காக முரண்படும் நிலையை உருவாக்குகிறார்கள். அதில் 50 விழுக்காட்டிற்குள்ளேயே இருக்கும் இடங்களை உள் ஒதுக்கீடு செய்வதால் சில சாதிகள் தங்கள் உரிமை பறிபோய்விடுமோ என்று அஞ்சுகின்றன. பொதுப்பட்டியலில் உள்ள 50 விழுக்காட்டை நீக்கிவிட்டு 100 விழுக்காடு முறையை செயல்படுத்தும்போது உள் ஒதுக்கீட்டுக்கான இடங்கள் எளிதாகக் கிடைத்துவிடும்.

உள் ஒதுக்கீடு தொடர்பாக உச்சநீதிமன்றம் அளித்த ஆதரவான தீர்ப்பை ஒட்டி எழுந்துள்ள விவாதங்களும் தடுமாற்றங்களும் புரிதல் குறைபாட்டின் காரணமாக உள்ளது. அதே நேரத்தில் அனைத்து கருத்துகளையும் ஏற்றுக்கொள்ள இயலாது. குறிப்பாக கிரீமிலேயர் முறையைக் கொண்டுவரலாம் என்பது முற்றிலும் சமுக நீதிக்கு எதிரானது.

உள் ஒதுக்கீட்டை எதிர்ப்பவர்கள் நாம் மேற்கூறிய வகையில் தங்கள் சாதிக்கான உரிமைகள் பறிபோய்விடும் என்று தவறாக அஞ்சுகிறார்கள். கெடுவாய்ப்பாக விடுதலைச் சிறுத்தைகள் போன்ற இயக்கங்களில் கூட உள்ஒதுக்கீட்டை எதிர்ப்பது அவமானகரமானது. ஏற்கெனவே மாநில அரசுகளுக்கு உள்ள பல அதிகாரங்கள் ஒன்றிய அரசால் பறிக்கப்படும் நிலையில் இடஒதுக்கீட்டுச் சட்டம் இயற்றும் அதிகாரத்தையும் பாதுகாப்பு அதிகாரத்தையும் ஒன்றிய அரசே எடுத்துக்கொள்ளச் சொல்லிப் போராடுவது மாபெரும் அரசியல் அறியாமையாகும்.

சமூகநீதிக்கு இந்தியாவிற்கே தமிழ்நாடு வழிகாட்டியாகத் திகழ்கிறது. இடஒதுக்கீடு இந்தியா முழுவதும் தமிழ்நாட்டைப் பார்த்தே தரப்படுகிறது.

இந்நிலையில் ஏற்கெனவே நடைமுறையில் உள்ள 341, 342 பிரிவுகளின்படி புதிதாகச் சாதிகளைப் பட்டியல் இனத்தில் சேர்ப்பதற்கு மாநில அரசுக்கு அதிகாரம் வழங்கப்படவில்லை. ஏற்கெனவே பட்டியல் இனத்தில் உள்ள சாதிகளுக்கு இடஒதுக்கீடு வழங்கத்தான் அதிகாரம் உள்ளது. அதைப் புரிந்துகொள்ளாமல் உள்ள கொஞ்சநஞ்ச உரிமைகளையும் மாநில அரசுகளிடமிருந்து ஒன்றிய அரசுக்குத் தாரைவார்க்கச் சொல்லிப் போராடுவது சமுகநீதிக்கு வழிகாட்டியான தமிழ்நாட்டிற்கு வெட்கக்கேடானது.

---

# வாழை

- திறனாய்வு

இயக்குநர் மாரி செல்வராஜின் பரியேறும் பெருமாள், கர்ணன், மாமன்னன் ஆகிய சிறந்த படைப்புகளின் தொடர்ச்சியாக ஆகச் சிறந்த படைப்பாக மிளிர்கிறது 'வாழை'. எளியவர்களால் அரங்குகள் நிரம்பி வழிகிறது.

இயக்குநர் மாரி செல்வராஜ் தான் நடந்து வந்த வழித் தடத்தின் கற்களோடும், முட்களோடும், வலிகளோடும் இளைப்பாறுதல்க ளோடும் கூடிய ஒரு சிறிய துணுக்கினைக் கட்டுடைத்து விரித்துப் பார்த்தலே கதையாக உணர்த்தப்படுகிறது.

1990களின் பிற்பகுதியில் தூத்துக்குடி மாவட்டம் புளியங்குளத்தில் அமைந்த கதைக்களத்தில் நிலவுடைமைக் குமுகத்தின் கொடுமைகளை, தொழிலாளிகள் படும்பாடுகளை, பாடுகளுக்கு நடுவிலும் ஊடாடுகிற துயரமான, எளிய மக்களின் வாழ்வைப் பேசுகிறது.

கணவனில்லை. பட்ட கடனை அடைக்க முடியவில்லை. இறந்து போன மனிதனின் நினைவாக, ஆறுதலாக, ஆற்றலாகக் கையில் பச்சை குத்தப்பட்ட அரிவாள் சுத்தியல் சின்னம்.

கடனை அடைக்க 'வாழைத்தார்'களைச் சுமக்கும் பணிகளைக் குடும்பமே செய்கிறது. திருமணத்திற்கு நிற்கும் மகள், பள்ளிச் செல்லும் மகன், கால்களில் மிதிபடும் வாழ்க்கை.

பள்ளிக்கு விடுமுறை என்றால் மகிழ்வு கொள்ளும் மாணவர்கள் நடுவில் விடுமுறை என்றால் வாழை சுமக்க வேண்டுமே என அழுகையும், அஞ்சுதலும், கெஞ்சுதலும் ஆன சிவணைந்தன், சேகரின் வாழ்க்கை.

ஓர் உருவா கூலி உயர்வுக்காகத் தொழிலாளிகளை அணிதிரட்டிப் போராடும் கனி (கலையரசன்)

ஒரு உருவா கூலியை விட்டு அதைச் சரி செய்ய வாழைத்தார் சுமையின் மேலே தொழிலாளர்களைப் பயணிக்கச் செய்த ஊதியக்கணக்கின் வெளிப்பாட்டு உருவாக சதீஷ்குமார்.. அரைப்படி நெல்லை கூலியாகக் கேட்டதற்கு 44 உயிர்களை தீ மூட்டிக் கொலைச் செய்த கொடுமைகள் கண்முன்னே வந்து போகிறது.

இளம் மாணவர்களின் துயரப்பட்ட வாழ்வில் சில ஆசிரியர் அமைவதுண்டு. அதுபோல சிவணைந்தனை ஈர்க்கும் ஆசிரியர் பூங்கொடி (நிக்கிலா விமல்). ஈர்ப்பின் வயப்பட்ட சிவணைந்தனை அரவணைத்து, ஆற்றுப்படுத்தி, அம்மாவாக, அப்பாவாக ஏற்கச் செய்யும் நெகிழ்ச்சியான காட்சி அமைப்புகள்.

சிவணைந்தனின் நண்பனாக சேகர் (ராகுல்) கமல், ரஜினி காலத்தை நினைப்பூட்டும் கலகல காட்சிகள். விரசமும், சரசமும் அல்லாத உழைப்பாளிகளின் பெருமூச்சுக் கலப்பாக வேம்பு, கனி இருவரின் காதல் மென்மையால் பேசுகிறது.

மண்ணின் மணத்தோடும், கசடுகளோடும், வட்டார மொழி பேச்சுகளோடும், எளிய மனிதர்களின் உடல் மொழிகளோடும், (பெயர் பெற்ற) நடிகர்கள் இல்லாமல் ஏற்றம் பெற்ற காவியம் வாழை.

பசிக்கு, ஒரு வாழைப்பழத்தைப் பறித்த போது தோட்ட உரிமையாளர்களிடம் பிடிபட்ட சிவணைந்தன் அடிபடும் கொடுமை.. தான் பொருட்களைத் தொடுவதற்கு உரிமையற்ற விவசாயக் கூலிகளின் கதையைப் பேசுகிறது.

இப்படியாக நிலவுடைமையாளர்கள், நிலமற்றவர்களின் முரண்களைப் போகிற போக்கில் தொட்டுச் செல்கிறது. முரண்களைச் சரி செய்ய தீர்வாகப் பொதுமையைக் குறியீடாகக் காட்டுகிறது.

பசுமை இழைந்தோடும் தேனி ஈசுவரனின் ஒளிப்பதிவு, சூழலோடு இழைந்தோடும் சந்தோச நாராயணனின் இசை. மனத்தைப் பிழியும் பாடல்களோடு புதுவை செயமூர்த்தி எனக் கோர்ப்பும் சேர்ப்பும் நல்வார்ப்பாக வளர்கிறது. வாழை வாழையடி வாழையாக...

பாவலர் ச. சிவகுமார் (சசி)

# இணையத்தில் பதிவுகள்..

## அமெரிக்க அதிபர் தேர்தல் விவாதம்

அமெரிக்காவில் குடியரசுத் தலைவரைத் தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் இவ்வாண்டு நவம்பர் மாதம் நடைபெறவுள்ளது. அதையொட்டி சனநாயகக் கட்சி சார்பாகப் போட்டியிடும் கமலா ஹாரிஸ் மற்றும் குடியரசுக் கட்சி சார்பாகப் போட்டியிடும் டொனால்ட் டிரம்ப் ஆகிய இருவரிடையேயான நேரடி விவாதத்தை ஏபிசி செய்தி நிறுவனம் ஒளிபரப்பியது. ஏறக்குறைய ஒன்றரை மணி நேரம் போனதே தெரியாமல் அந்த விவாதம் சூடும் சுவையுமாக இருந்தது. இந்த விவாதத்தை ஆண் மற்றும் பெண் என இரு நெறியாளர்கள் ஒருங்கிணைத்தனர்.

அமெரிக்க அதிபர் தேர்தல் நடைபெறும் ஒவ்வொரு முறையும் போட்டியிடும் வேட்பாளர்கள் தொலைக்காட்சியில் நேரடியாகத் தோன்றி விவாதிக்கும் முறை இருந்து வருகிறது. இது வரவேற்கத்தக்கதும் கூட! இந்தியாவிலும் தலைமை அமைச்சருக்கான தேர்தல் நடைபெறும் பொழுது இப்படிப்பட்ட வெளிப்படையான விவாதங்கள் நடைபெற வேண்டும். கடந்த இந்திய நாடாளுமன்றத் தேர்தல் நடைபெற்ற பொழுது, அப்படிப்பட்டதோர் விவாதத்திற்கு இராகுல் காந்தி மோடியை அழைத்த பொழுது. மோடி கமுக்கமாகப் பின் வாங்கிவிட்டதை அனைவரும் அறிவர். மடியில் கனம் இருந்தால், வழியில் பயம் இருக்கும்தானே?

கமலா ஹாரிஸ் டிரம்ப்பைக் கை குலுக்கி வரவேற்றபின், விவாதம் தொடங்கியது.
கமலா ஹாரிஸ், தங்களது கடந்த கால ஆட்சியின் செயல்பாடுகள் பற்றியும், எதிர்வரும் தேர்தலில் வெற்றி பெற்றால் தங்களது திட்டங்கள் பற்றியும் விரிவாக எடுத்துரைத்தார். குறிப்பாகத் தான் அதிபரானால் செயல்படுத்தவுள்ள திட்டங்கள் பற்றி விரிவாக எடுத்துரைத்தார். அவரது அனுகுமுறை முற்றிலும் நடுத்தர வர்க்க மக்களின் நல்வாழ்வு குறித்தே அமைந்திருந்தது. வீடுகள் பற்றாக்குறை நீக்கம், வரி குறைப்பு, மருத்துவ நல்வாழ்வு, சிறு தொழில் மேம்பாடு, அடிப்படை பொருள்கள் விலைகுறைப்பு போன்ற நலத்திட்டங்கள் குறித்து அவர் விளங்கினார். குறிப்பாக ட்ரம்ப் ஆட்சியின் வரிக் கொள்கை குறித்த தனது விமர்சனத்தை முன்வைத்தார்.

ஆனால் டிரம்ப்பின் பேச்சு வெறுப்பைக் கக்குவதாகவும், தனி மனிதத் தாக்குதலாகவும், பொய்க்குவியலாகவுமே இருந்தது. கமலாவின் குடும்பம் மார்க்சிஸ்டுகள் எனக் குற்றம் சாட்டினார். குறிப்பாக அகதிகளை ஜோ பைடன் அரசு ஊக்குவித்ததாகக் குற்றம் சாட்டிய அவர், புலம்பெயர்ந்து வருபவர்கள் கிரிமினல்கள் எனவும், அவர்களால் அமெரிக்கப் பொருளாதாரம் சீரழிவதாகவும் சாடினார். புலம்பெயர்ந்தவர்கள் தங்களது வீட்டினுள்ள பூனை, நாய் மற்றும் செல்லப் பிராணிகளைக் கொன்று தின்பதாக அதிரடிப் பொய்யை அள்ளி வீசினார்.

ஆனால், அனைவரையும் உள்ளடக்கும் கொள்கை ( Inclusive Policy) கொண்டதாக கமலா ஹாரிசின் அணுகுமுறை திகழ்ந்தது. கருத்தடை பெண்களின் உரிமை எனவும், பெண் உடல் மீது அரசுக்கு அதிகாரம் இல்லை எனவும் அவர் உறுதிபடக் கூறினார். அது மட்டுமல்ல. டிரம்ப் ஆட்சிக் காலத்தில் அமெரிக்கப் பொருளாதாரம் வீழ்ச்சி அடைந்ததை 16 நோபல் பரிசு பெற்ற வல்லுநர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர் என்றும் கமலா ஹாரிஸ் குறிப்பிட்டார்.

மேலும் தனக்குச் சொந்தமான கட்டடங்களைக் கருப்பர்களுக்கு டிரம்ப் வாடகைக்குத் தருவதில்லை எனவும், இனத்தைக் காரணம் காட்டி டிரம்ப் மக்களைப் பிளவு படுத்துவதாகவும் கமலா குற்றம் சாட்டினார்.

மேலும் தனது அரசியல் எதிரிகளைப் பழிவாங்க டிரம்ப் ஆட்சி அதிகாரத்தைப் பயன்படுத்தினார் எனவும், தனிப்பட்ட முறையில் நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்ட பிறகும், டிரம்ப் பொய்களைத் துணிந்து கூறி வருகிறார் எனவும் கமலா குறிப்பிட்டார்.

கடந்த தேர்தலில் டிரம்ப் தோல்வி அடைந்ததை முன்னிட்டு நடந்த வன்முறைகளை டிரம்ப் நியாயப்படுத்தியதோடு, இம்முறை தான் தோல்வி அடைந்தால், அமெரிக்காவின் இரத்தக்களறி ஏற்படும் எனவும் டிரம்ப் எச்சரித்தார்.

இப்படிப்பட்ட ஒரு நபர் அமெரிக்கா போன்ற ஒரு வல்லரசு நாட்டின் தலைமைப் பொறுப்புக்கு வந்தால், அது அமெரிக்காவிற்கு மட்டுமல்ல, உலகம் முழுவதற்கும் பாதிப்பை உண்டாக்கும். அது மட்டுமல்ல, அமெரிக்க மக்களுக்கே தலைகுனிவாகப் போய்விடக் கூடிய வாய்ப்பும் உள்ளது.

– கண. குறிஞ்சி

## அரசுப் பேருந்தில் ஆர். எஸ். எஸ். முழக்கங்கள் !

**ஒவ்வொரு முனையிலும் ஒவ்வொரு இடத்திலும் எதிர்த்து நிற்போம்!**

இன்று காலை ஒரு வழக்கிற்காக, திருவள்ளூர் மாவட்ட நீதிமன்றம் செல்ல திருவள்ளூர் தொடர்வண்டி நிலையத்திற்கு அருகில் உள்ள அரசுப் பேருந்து ஏறினேன்.

ஓட்டுநருக்கு அருகில் உள்ள கண்ணாடியில் **பாரத் மாதா கி ஜெய்** என்ற முழக்கத்துடன் ஆர்எஸ்எஸ்-இன் பாரத மாதா படமும் இந்துஸ்தானம் ஏன் அவசியம் என்பதைப் பற்றி ஒரு சிறிய வாசகமும் இடம்பெற்றுள்ளது.

அந்த வாசகத்தின் கீழே பாரதியார் என்றும் பெயர் போட்டிருந்தது.

எனக்குத் தெரிந்த வகையில் பாரதியார் இப்படி ஒரு பாப்பா பாட்டு எழுதியது போல இல்லை. ஆர்எஸ்எஸ் பாசிஸ்டுகள் எப்படி எல்லா இடத்திலும் ஊடுருவித் தங்கள் கருத்துகளைப் பதிய வைக்கிறார்கள் என்பது மிகவும் முக்கியம். இதை அந்த இடத்தில் எதிர்கொள்ளாமல் நாம் வேறு எங்கேயும் எதிர்கொள்ள முடியாது.

என்னைத் தவிர அந்தப் பேருந்தில் இருந்தவர்கள் அத்தனைப் பேரும் சட்டக் கல்லூரி மாணவர்கள். சிலர் ஊழியர்களாக இருக்கலாம். யாருக்கும் இது தவறாகக் கூடத் தெரியவில்லை, ஏன் கவனிக்காமல் கூடப் போய் இருக்கலாம்.

ஓட்டுநரின் கடவுள் நம்பிக்கையை நான் கேள்விக்குள்ளாக்கவில்லை. ஒவ்வொரு ஓட்டுநரும் தன்னுடைய பணியைச் சரியாக செய்ய வேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையில் செயல்படுவார்கள். அவர்களுக்குப் பிடித்த கடவுள் படத்தை தாங்கள் வேலை செய்யும் பணியிடத்திற்கு அருகில் வைப்பார்கள்.

நான் ஏறிய அரசுப் பேருந்தில்கூட ஓட்டுநர் அவருக்குப் பிடித்த கடவுள் படத்தை மாட்டி வைத்திருந்தார். அதுவல்ல பிரச்சனை, அதன் கூடவே ஆர் எஸ் எஸ் - இன் சேதாரமில்லாத இந்துஸ்தானம் தொடர்பான படத்தையும் வைத்திருந்தார்.

நீதிமன்றம் நிறுத்தம் வந்தவுடன் "இது என்ன போட்டோ?" - என்று ஓட்டுநரிடம் கேட்டேன்.

"பாரதமாதா போட்டோ" என்றார்.

"ஆர். எஸ். எஸ் இன் வாசகத்தைக் கொண்ட பாரத மாதா போட்டோவை வைக்கலாமா?" என்று கேட்டேன்.

அமைதியாக இருந்தார்.

"யாரோ வைத்திருப்பார்கள், யார் வைத்தார்கள் என்று எனக்குத் தெரியாது" என்றார்.

"உங்களுக்குத் தெரியாமல் நடந்த சம்பவம் என்றால் இதனால் ஏற்படும் அனைத்துப் பிரச்சனைகளுக்கும் நீங்கள் பொறுப்பாவீர்களா? இல்லையா?" என்று கேட்டேன்.

இதற்கிடையில் நடத்துநர், "என்ன பிரச்சனை? " என்றார்.

"ஆர்எஸ்எஸ்-இன் படத்தை எப்படி அரசுப் பேருந்தில் வைக்க முடியும்? என்று கேட்டேன்.

இதற்கிடையில் ........... - இல் பணிபுரியக்கூடிய ஒரு பெண், நான் பேசிக் கொண்டிருப்பதை மடைமாற்றும் வகையில், "ஸ்டூடென்ட்ஸ் இருக்கிறாங்க இறங்குங்க சார்" - அதையே திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருந்தார்.

" ஆர் எஸ் எஸ் படத்தை இங்கே வைத்தது பற்றி பதில் சொல்லாமல் இறங்க மாட்டேன்" என்று உறுதியாக இருந்தேன்.

பேருந்தில் பலரும் அமைதியாக நான் பேசுவதைக் கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

"இந்த நாட்டின் பெயர் என்ன இந்தியாவா? இந்துராஷ்டிரமா? அரசியலமைப்புச் சட்டத்தின் அடிப்படையில் அரசுப் பேருந்தில் ஆர்எஸ்எஸ் - இன் படத்தை வைப்பதற்கு இடம் இருக்கிறதா?

"அகண்ட பாரதம் மேப் போட்டு அதில் ஆர்எஸ்எஸ் இன் பாரத மாதாவை வைப்பதற்கு யார் உரிமை கொடுத்தது?"

உங்களுக்குப் பிடித்த கடவுளை வழிபடுகிறீர்கள் என்பது வேறு. ஆர் எஸ் எஸ் என்ற மதவெறி அமைப்புக்கு ஆதரவாக இருக்கிறீர்கள் என்பது வேறு" - என்று நான் பேசிக் கொண்டிருந்தேன்.

"பசங்க யாராவது வச்சிருப்பாங்க நாங்க என்ன செய்ய முடியும்?" என்றார் நடத்துநர்.

"நாளைக்குத் தனி தமிழ்நாடு வேணும், ஆர் எஸ் எஸ் அமைப்பைத் தடை செய்யணும்னு யாராவது ஒரு படம் கொடுத்தா அதுவும் மாட்டி வைப்பீங்களா?" என்றேன்.

வேறு வழியின்றி ஓட்டுநர் ஆர் எஸ் எஸ் - இன் பாரதமாதா போட்டோவை எடுத்து கீழே வைத்துவிட்டார்.

"இப்ப போதுமா சார் ?" என்றார்.

நான் இறங்கும்போது அந்தப் பெண் மீண்டும் ஆரம்பித்தார்.

"அம்மா நீங்க எல்லாம் மக்கள் பணத்தில் தான் சம்பளம் வாங்குறீங்க, ஆர் எஸ் எஸ்-காரன் கிட்ட கிடையாது. அதாவது நினைவிருக்கா?" என்றேன். அந்தப் பெண் மேற்கொண்டு பேசவில்லை.

நான் இறங்கியவுடன் தான் பேருந்து கிளம்பியது.

ஆர் எஸ் எஸ் - பாஜக; அம்பானி - அதானி பாசிசம் ஒழிக என்பதன் பொருள் சமூக வலைதளத்தில் கருத்துப் பதிவிடுவது மட்டுமல்ல நாம் காணும் திசையெல்லாம் ஆர்எஸ்எஸ் பாசிசக் கும்பலுக்கு எதிராக போராடுவது தான்!

ஆர்எஸ்எஸ் - பாஜக பாசிஸ்டுகளை ஒவ்வொரு முனையிலும் எதிர் கொள்வோம்.

ஏனென்றால் இது தமிழ்நாடு!

**- தோழர் மருது, மக்கள் அதிகாரம்**

## சமசுக்கிருத வேதபுராணத்தைக் தூக்கிப் பிடிப்பவர் தமிழாய்வு நிறுவனத்துக்குத் தலைவரா?

# சுதாசேசையன் செம்மொழித் தமிழாய்வு நிறுவனத்தின் துணைத்தலைவராம்! தமிழறிஞர்கள் அதிர்ச்சி!

தமிழ்நாடு எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகத்தின் துணை வேந்தராக இருந்து ஓய்வுபெற்றவர் சுதா சேசையன். அப்போது இவருக்குத் தமிழக ஆளுநர் ஓராண்டு பணி நீட்டிப்பு வழங்கியிருந்தார். அந்த ஓராண்டு பணி நீட்டிப்பும் நிறைவுபெற்றுவிட்ட நிலையில், இப்போது செம்மொழித் தமிழாய்வு நடுவண் நிறுவனத்தின் துணைத் தலைவராக இந்திய அரசு சுதா சேசையனை (நியமித்திருக்கிறது) பொறுப்பமர்த்தம் செய்திருக்கிறது. தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலினைத் தலைவராகக் கொண்டு இயங்கும் இந்த நிறுவனத்தின் தலைவராக சுதா சேசையனை நியமித்து திமுக அரசுக்குச் 'சவால்' விடுகிறது இந்திய ஒன்றிய அரசு என்று குமுறுகின்றனர் தமிழறிஞர்கள்.

இது குறித்து நம்மிடம் பேசிய கல்வியாளர்கள், "சுதா சேசையன் ஒரு வலதுசாரி சிந்தனையாளர். ஒன்றிய அரசு நடத்திய காசி தமிழ்ச் சங்கம் என்னும் பெயரிலான நிகழ்ச்சியை இவர்தான் ஒருங்கிணைத்தார்.

தமிழுக்கும் தமிழ்நாட்டிற்கும் எதிரானவை பல காசி தமிழ்ச்சங்க நிகழ்ச்சியில் நடந்தன.

மேலும், தலைமையமைச்சர் மோடி, ஆளுநர் இரவி, ஒன்றிய அமைச்சர் நிர்மலா சீதாராமன் உள்ளிட்டோருக்குத் தமிழ் மொழி தொடர்பான குறிப்புகளைக் கொடுத்து வருபவர். பெரும்பாலும் அவை, தமிழுக்கும் தமிழ்நாட்டின் வரலாற்றுக்கும், திராவிட இயக்கப் பணிகளுக்கும் எதிராகவே இருக்கின்றன. திராவிடக் கொள்கைகளுக்கு எதிராகத் தமிழ்நாட்டின் ஆளுநர் அலுவலகமான 'ராஜ்பவன்' பேசுவதன் பின்னணியில் இவரின் குறிப்புகளும் இருக்கின்றன.

திராவிட கொள்கைகளுக்கும், திமுக அரசுக்கும் எதிரான நிலைப்பாட்டை கொண்டிருக்கும் சுதா சேசையனை, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையில் இயங்கும் செம்மொழித் தமிழாய்வு நடுவண் நிறுவனத்தின் துணைத் தலைவராகப் பொறுப்பளித்திருப்பது நல்லதாகப்படவில்லை. தமிழறிஞர்கள், தமிழகக் கல்வியாளர்கள் அமரவேண்டிய பதவியில் பாஜக, ஆர்.எஸ்.எஸ். சிந்தனை கொண்ட, ஒன்றிய அரசின் புதிய கல்விக் கொள்கையை ஆதரிக்கும் ஒருவரை நியமித்திருப்பது பார்ப்பனீய உள்நோக்கம் கொண்ட திட்டமாகவே கருத வேண்டியிருக்கிறது. இவரது நியமனத்தைத் தி.மு.க அரசு எதிர்க்காமல் ஏன் அமைதி காக்கிறது? செம்மொழித் தமிழாய்வு நிறுவனத்தின் வழியாகத் தமிழின் வளர்ச்சிக்காகவும் ஆராய்ச்சிக்காகவும் பணிகளைச் சரியாகத் திட்டமிட்டு விரிவாகச் செயல்பட வேண்டியிருக்கிறது. ஆனால், இவரது 'நியமனத்'தால் அவ்வாறு நடைபெறாமற் போய்விடுமென்ற பேரச்சம் ஏற்பட்டிருக்கிறது என்கின்றனர். ஆகவே, தமிழ்நாடு அரசு இதுகுறித்து உரிய கவனம் எடுத்து நடவடிக்கை எடுக்க வலியுறுத்துகிறோம்.

**– ஒப்புரவாளன்.**

தருக்க மேடை

# இடதுசாரிகளின் ஒருங்கிணைப்பு

**தங்க குமரவேல்**
தமிழ்நாடு மக்கள் விடுதலை இயக்கம்

இடதுசாரிகளின் ஒருங்கிணைப்பில் இன்றியமையாத கூறு தத்துவார்த்தப் போராட்டமாகும். இடதுசாரிகள் பல்வேறு கூறுகளாக செயல்படுவதற்கு இந்தப் புரிதலே காரணமாக உள்ளது. ஒரு நாட்டில் நிலவும் உற்பத்தி முறையைப் புரிந்துகொள்வதில் இடதுசாரி அமைப்புகளிடையே ஏற்படும் புரிதல் குறைபாடு அல்லது ஒரு புரட்சிகர நடவடிக்கை மீது ஏற்படும் அவ நம்பிக்கை போன்ற பல்வேறு காரணங்களால் இடதுசாரி அமைப்புகள் சிறுசிறு குழுக்களாகப் பிரிந்து இயங்குவதற்குக் காரணமாக உள்ளது.

அமைப்புப் பெரியதா? அரசியல் பெரியதா? என்னும் கேள்வியை எழுப்பினால் அமைப்பைவிட அரசியல்தான் பெரியது என்பது தெளிவாகும். ஆனால் இதை உணராமல் அமைப்பியல் வாதத்திற்கு ஆளாகி இடதுசாரிகள் வழிவிலகுவதால் பல்வேறு அமைப்புகள் உருவாகின்றன.

இந்தியத் துணைக்கண்டத்தில் நிலவும் உற்பத்தி முறையையும் சாதி என்னும் சிறப்புக்கூறையும் சரியாகப் புரிந்துகொண்டால் பல்வேறு அமைப்புகள் தோன்றுவதற்கு வாய்ப்புகள் இல்லை. அடிக்கட்டுமானம், மேல் கட்டுமானம் ஆகியவற்றின் தாக்கத்தைச் சரியாக ஆய்வுசெய்து முடிவு எடுத்தால் இடதுசாரிகள் இணைப்பு சாத்தியமாகும்.

இந்தியத் துணைக்கண்டத்தில் விவசாயத்தில் உற்பத்திமுறை நிலவுடைமை முறையில் இருந்து முதலாளித்துவ முறைக்கு மாறிவிட்டதாகவும் அதனால் இந்தியாவில் சோசலிசப் புரட்சிதான் நடத்த வேண்டும் என்னும் கருத்தியலைக் கொண்ட அமைப்புகள் ஒருபுறம் இயங்குகின்றன.

இந்தியத் துணைக் கண்டத்தில் விவசாயத்தில் நிலவுடைமை உற்பத்தி முறைதான் நிலவுகிறது. அதனால் இந்தியாவில் புதிய சனநாயக புரட்சிதான் நடத்த வேண்டும் என்னும் கருத்தியலைக் கொண்ட அமைப்புகள் ஒரு புறம் செயல்படுகின்றன.

புதிய சனநாயகப் புரட்சியையோ சோசலிசப் புரட்சியையோ ஆதரிக்காமல் ஆய்வுசெய்கிறோம் என்று சொல்லி எந்த நிலைப்பாடும் இன்றி விழலுக்கு நீர் இரைக்கும் போக்கில் செயல்படும் சில அமைப்புகளாலும் தனிமனிதர்களாலும் குழப்பவாதமே மிஞ்சுகிறது. இவர்களால் புதிய சனநாயக முகாம், சோசலிச முகாம் இரண்டிற்குமே எந்தவகையான பயனும் இல்லை.

இந்தியாவிற்குத் தேவை புதிய சனநாயகப் புரட்சியா? சோசலிசப் புரட்சியா? என்பதைச் சரியாக ஆய்வுசெய்தால் மட்டுமே இடது சாரிகளின் இணைப்புச் சாத்தியமாகும்.


இப்போதைய சூழலில் புதிய சனநாயகப் புரட்சியை ஆதரிக்கும் அமைப்புகளும் சோசலிசப் புரட்சியை ஆதரிக்கும் அமைப்புகளும் ஆங்காங்கே இயங்கி வருகின்றன. ஆனால் இந்த இருவேறு கருத்தியல் கொண்ட அமைப்புகளும் இன்னும் இரு முகாம்களாக வளரவில்லை. அதற்கான முயற்சிகளும் முறையாக மேற்கொள்ளப்பட்டதாகத் தெரியவில்லை. இந்நிலையில் எமது தமிழ்நாடு மக்கள் இயக்கத்தின் நிலைப்பாட்டைக் கூறி இக் கட்டுரையை முடிப்போம்.

இந்தியாவில் நிலவும் உற்பத்திமுறை இன்னும் நிலவுடைமை முறையிலிருந்து முற்றும் முழுமையான முதலாளித்துவ உற்பத்திமுறைக்கு மாறவில்லை. முதலாளித்துவத்தின் தாக்கத்தால் மேலோட்டமாக ஏற்பட்டுள்ள உற்பத்தி உறவு தளர்வு நிலையை உற்பத்தி முறையைத் தவறாகப் புரிந்துகொண்டு சோசலிசப் புரட்சி நடத்த வேண்டும் என்று அமைப்புகள் தடுமாறுகின்றன. இந்தியாவில் இன்னும் கிராமங்களின் எண்ணிக்கையே அதிகமாக உள்ளது. அதனால் நிலவுடைமை உற்பத்தி முறையையே நீடிக்கிறது. உலகமயமாக்கல் என்னும் வல்லரசியக் காலகட்டத்தில் தேசிய முதலாளித்துவம் முழுமை பெறாமல் தரகு முதலாளித்துவம் என்னும் புதிய நிலை தோன்றியுள்ளது. ஆனால் நிலவுடைமை உற்பத்தி முறையில் முழுமையான அளவில் மாற்றம் ஏற்படாததால் இந்தியாவிற்குப் புதிய சனநாயகப் புரட்சியே தேவை என்பதே எமது தமிழ்நாடு மக்கள் விடுதலை இயக்கத்தின் நிலைப்பாடாகும்.

கம்யூனிஸ்டு இயக்கங்கள் புரட்சிகரப் பாதையை விட்டு தேர்தல் பாதை என்னும் தேய்ந்துபோன வழித்தடத்தில் அண்மைக்காலமாகப் பயணிக்கத் தொடங்கியுள்ளன. இது முற்றிலும் பெரிய வழிவிலகல் ஆகும். இதைத் தமிழ்நாடு மக்கள் இயக்கம் ஏற்க மறுக்கிறது. எனவே தமிழ்நாடு மக்கள் விடுதலை இயக்கத்தின் நிலைப்பாட்டின்படி புதிய சனநாயகப் புரட்சியை ஆதரிக்கும் அமைப்புகளின் கூட்டமைப்பே இடதுசாரிகளின் இணைப்புக்கு உகந்தது என்று உறுதியாகக் கூறுகிறோம்.

(இதுபற்றிய அரசியல் கருத்துகளைத் தோழர்கள் **தருக்க மேடை** பகுதிக்கு அனுப்பலாம்.)

# வெள்ளையனுக்கு வீரவணக்கம்....




வெள்ளையன் பெயர் மட்டுமல்ல..
உள்ளமும் வெள்ளைதான்! எடுப்பான தோற்றம், முறுக்கிய மீசை, எவரையும் ஈர்த்து விடும் கனிவான அணுகுமுறை,
இவற்றுக்குச் சொந்தக்காரர் - தான் ஐயா வெள்ளையன் அவர்கள். கடந்த செப்டம்பர் 10ஆம் நாள் ஐயா வெள்ளையன் அவர்கள் மறைந்தார் என்ற செய்தி தமிழ் மக்கள் ஒவ்வொருவரையும் அதிர்ச்சியில் ஆழ்த்தியது.
வணிகர் சங்கத் தலைவராக இருந்த ஒருவர் மறைவு என்பது வணிகர்கள் மட்டுமின்றி, அரசியல் கட்சித் தலைவர்கள், இயக்க அரசியல் தலைமைகள், சமூகச் செயற்பாட்டாளர்கள் என ஒட்டுமொத்தத் தமிழ்ச் சமூகத்தையும் வேதனையில் ஆழ்த்தியது. ஐயா வெள்ளையன் அவர்கள் தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் தலைவர் என அறியப்பட்டிருந்தாலும் அவர் ஒரு தமிழ்த் தேசிய சிந்தனையாளர் மட்டுமல்ல; அதைச் செயல்படுத்தியவரும் கூட. பெரும்பாலான தமிழ்த் தேசியப் போராட்டங்களில் நேரடியாகப் பங்கு எடுத்தவர், சில போராட்டங்களுக்குப் பின்னணியில் இருந்து ஆதரவு கொடுத்தவர். ஏழு தமிழர் விடுதலையில் முக்கியப் பங்காற்றியவர்.
தமிழீழப் பிரச்சினையில் மிக முக்கியமான ஆளுமையாகச் செயல்பட்டவர். ஈழப் போர் என்பது இலங்கையில் மட்டும் நடந்த போராட்டம் அல்ல, அந்தப் போராட்டத்திற்கான பொருளாதார அடித்தளம் மற்றும் ஆதரவுக் களமாகத் தமிழ்நாடு இருந்தது. அப்படியான ஆதரவு ஆற்றல்களில் முக்கியமானவராக ஐயா வெள்ளையன் அவர்கள் இருந்திருக்கிறார். அவரைப் போன்று எண்ணற்றவர்களின் ஈழத்திற்கான உழைப்பு எங்கேயும் பதிவாகவில்லை. அதுபற்றி அவர்கள் எங்கேயும் சொன்னதும் கிடையாது. மேலும் தமிழ்நாட்டைப் பாதிக்கக்கூடிய அணு உலை, ஸ்டெர்லைட், மீத்தேன், ஐட்ரோ கார்பன், நியூட்ரினோ, சேலம் எட்டு வழிச் சாலை போன்றவற்றிற்கான எதிர்ப்புப் போராட்டங்களில் தன்னை இணைத்துக் கொண்டது மட்டுமல்லாமல் வணிகர் சங்கங்களையும் ஈடுபடச் செய்துப் போராட்டங்களுக்கு வலு சேர்த்தவர். சிறு வணிகர்களை நேரடியாக பாதிக்கக் கூடிய இணைய வழி வர்த்தகம், தனியார்மய, தாராளமயப் பொருளாதாரக் கொள்கைகள், சிறு வணிகத்தில் அந்நிய முதலீடுகள் போன்றவற்றிற்கு எதிராகப் போராட்டங்களை அறிவித்து அதற்காகச் சிறை சென்றவர். ரிலையன்ஸ், வால்மார்ட் போன்ற பன்னாட்டு முதலாளிகளின் வணிகங்களைத் தமிழ்நாட்டில் அனுமதிக்க முடியாது என வணிகர்களைத் திரட்டிப் போராடிய தேசிய நாயகர் ஆவார்.
ஒரு வணிகராக, வணிகர் சங்கத் தலைவராக மட்டும் இருந்திடாமல், தமிழ்நாட்டின் உரிமை சார்ந்த, அனைத்துப் போராட்டங்களிலும் தமிழ் உணர்வோடு, பங்கெடுத்த ஐயா வெள்ளையன் அவர்களைத் தமிழ்ச் சமூகம் என்றென்றும் நன்றியுடன் நினைவுகூர வேண்டும். மீண்டும் புகழ் வணக்கத்தையும் வீரவணக்கத்தையும் செலுத்துவோம்!

– தமிழ்முகம்

# பார்வைக்கு வந்த சில நூல்கள்..


## எங்கே? என் தேசம்...




ஆசிரியர்: தாம்பரம் முருகன்
வெளியீடு: வேலுநாச்சியார் பதிப்பகம், எண். 77, வேளச்சேரி முதன்மைச்சாலை, ராஜகீழ்ப்பாக்கம், சென்னை - 600 073
தொலைபேசி: 9941999222.

•

## தமிழ் சமற்கிருதம் தனித்தமிழியக்கம்



ஆசிரியர்கள்: செ. இளஞ்சென்னியன், க. அன்பரசு விலை: உரு. 120/-
வெளியீடு: தமிழி பதிப்பகம், சன்னதி தெரு, காளையார்கோவில் - 630 551


சமற்கிருதம் என்னும் சமூக, அரசியல், பண்பாட்டு ஆதிக்க மொழியின் மேலாண்மையை எதிர்த்துத் தொடங்கப்பட்ட தனித் தமிழியக்கம் நூற்றாண்டைக் கண்டிருக்கும் இச் சூழலில் இத் தொகுப்பில் உள்ள கட்டுரைகள் தனித்தமிழியக்கம் தமிழின் நீண்ட சமற்கிருத ஆதிக்க எதிர்ப்பு மரபின் தொடர்ச்சி என்பதையும் அவ் வியக்கம் மொழி, சமூகம், சமயம் என்னும் வகையில் ஏற்படுத்தியத் தாக்கத்தையும் புதிய ஆய்வுகளுக் கானத் திறவுகளையும் வெளிப்படுத்துகின்றன.

•

## ஆதித்தமிழ் நிலமும் அருந்ததியர் வரலாறும்...

விலை: உரு. 120/-
வெளியீடு;
ஆசிரியர்: மு. தமிழ்வாணன் ,
2/142, மகிண்டி காலனி, மைக்கேல் பட்டணம் அஞ்சல், முதுகுளத்தூர் வட்டம், முகவை மாவட்டம்
தொலைபேசி: 8489368626.


“கொடுமைப் பாறைகளையே மீண்டும் மீண்டும் எங்கள் தலையில் ஏற்ற முயற்சித்தால் அக்னிப் பிழம்புகளை




அள்ளி வீசும் எரிமலையாய் என் சமுதாயம் ஒருநாள் மாறும்”

•

## குளம்படி (புதினம்)




ஆசிரியர்: வெற்றிச்செல்வன் இராசேந்திரன்
விலை: உரு. 380/-
வெளியீடு: யாழிசைப் பதிப்பகம்,
30, மேரி குடியிருப்பு,
புதுப் புல்லுக்காரத் தெரு,
தஞ்சாவூர் - 613 001
தொலைபேசி: +91 9943311008.


"சுழன்றும் ஏரப் பின்னது உலகம்" என்ற வள்ளுவர் அதே அதிகாரத்தில் உழவுத் தொழிலில் கால்நடை எருவின் முக்கியத்துவம் குறித்தும் பதிவு செய்திருக்கிறார். உலகின் பசியைப் போக்கிட வேளாண்மைத் தொழில் செய்யும் உழவர்களின் நிலத்தில் கால்நடை எருவின் தேவைக்காகக் கிடை அமர்த்தும் கீதாரி இனத்தின் வாழ்க்கைச் சூழலைச் சித்தரிக்கிறது. இந்தப் படைப்பு. தென்தமிழகத்தின் நிலமெங்கும் உணர்வுமிகுதியால் புல்லரித்துக் கிடந்த காலம் ஒன்று இருந்தது. தோளுயரம் வளர்ந்த பிள்ளையைப்போலத் தூக்கிக் கொஞ்சும் அளவு எடையுள்ள ஆடுகளின் குளம்படிகள்தாம் அந்தப் பூமியின் புல்லரிப்பிற்குக் காரணம் சாலைகள், வயல்கள், வரப்பு மேடுகள், காடுகளென அந்தக் கால்கள் அளந்திடாத வெளி எங்கும் இல்லை யெனும் அளவிற்குப் பரவலான ஓர் உறவு விளை நிலங்களுக்கும் மேய்ச்சல் குடிகளுக்கும் உண்டு, அந்தக் கிடை வாசமும் நம்மை உரசி விளையாடும் ஆடுகளின் குறுகுறுப்பும் அதே புல்லரிப்பும் மீண்டும் உணரத் தூண்டுவதாய் இந்தப் புத்தகம் அமைந்துள்ளது.

•

## கிடை

"வலசையும் வாழ்வும்" - காலாண்டிதழ்


ஆசிரியர் குழு: இளஞ்சென்னியன், கதிர்நம்பி, அலையாத்தி செந்தில், ஹேமா, சுரேஷ் குமார், இனியன், வெற்றிச் செல்வன்




விலை: உரு. 150/-
வெளியீடு: கால்நடை வளர்ப் போர் நல நடுவம் - கல்குளம், முடிக்கரை அஞ்சல், காளையார் கோயில் - 630 551 தொலைபேசி: 9677517899.

•

## வன உரிமைகள் சட்டம் 2006 மேய்ச்சல் சமூகத்தினர்க்கான கையேடு




வெளியீடு: தலைவர், தமிழ்நாடு மேய்ச்சல் சமூகக் கூட்டமைப்பு, கல்குளம், முடிக்கரை அஞ்சல், காளையார் கோவில் 630 551, சிவகங்கை மாவட்டம் தொலைபேசி: 9677517899.

இந்திய அரசின் பழங்குடியினர் விவகார அமைச்சகம், பல்வேறு தருணங்களில் மாநில அரசுகளுக்கு வஉச 2006ஐ அமல்படுத்துவது சம்பந்தமாக வழங்கியுள்ள அறிவுறுத்தல்கள், விளக்கங்கள் மற்றும் வழிகாட்டுதல் நெறிமுறைகளில் குறிப்பிடப் பட்டுள்ள தகவல்களை மேய்ச்சல் சமூகத்தினர் எளிதாகப் புரிந்து கொண்டு பயன்படுத்தும் நோக்கத் தோடு, மேய்ச்சல் சமூகத்தினர்க்கான கையேடாக வெளியிடப்பட்டுள்ளது.

# கல்வித் துறையைக் காவிமயமாகாமல் தடுப்போம்..

க. இரா. தமிழரசன்
தமிழ்த் தேசக் குடியரசு இயக்கம்

சென்னை சைதாப்பேட்டையில் உள்ள அரசுப் பள்ளியில் நடைபெற்ற ஒரு நிகழ்ச்சியில் பரம்பொருள் பவுண்டேசன் என்ற அமைப்பின் சார்பில் பங்கேற்று பேசிய மகா விஷ்ணு என்ற பேச்சாளர் அறிவியலுக்குப் புறம்பான படுபிற்போக்கான கருத்துகளைப் பேசியுள்ளார். "மாணவிகள் அழகாக இல்லாததற்கு கடந்த பிறவிகளில் செய்த பாவம்தான் காரணம் என்றும், போன சென்மத்தில் பாவம் செய்தவர்கள் தாம் இந்த சென்மத்தில் மாற்றுத் திறனாளிகளாகவும், ஏழைகளாகவும் பிறக்கிறார்கள், கை, கால், கண்பார்வையற்றவர்களாக பிறப்பதற்குப் பாவங்கள் தாம் காரணம் என்றும், இதுபோன்று பல்வேறுவகையான மூடநம்பிக்கைகளை மாணவர்களிடையில் பேசினார்.

அப்போது அந்தப் பள்ளியில் பணியாற்றும் மாற்றுத்திறனாளி தமிழாசிரியர் சங்கர் அவரது கருத்துக்கு மறுப்பு தெரிவித்துப் பள்ளியில் முற்பிறவி, பாவம், சென்மம் போன்ற கருத்துகளை பேசக்கூடாது எனத் தனது கண்டனத்தைப் பதிவு செய்தார். மேடையில் இருந்த மகாவிஷ்ணு அந்த ஆசிரியரை எல்லோர் முன்னிலையிலும் மிகவும் கடுமையான வார்த்தைகளைப் பயன்படுத்தி இழிவுபடுத்தினார், ஆன்மீகம் குறித்துப் பள்ளிக்கூடத்தில் பேசாமல் வேறு எங்கே பேசுவது என மிரட்டவும் செய்தார். அதன் பிறகு தலைமை ஆசிரியரின் தலையீட்டின் பேரில் அவரது பேச்சு நிறுத்தி வைக்கப்பட்டது. சமூக வலைதளங்களில் இந்த நிகழ்வு வெளிவந்த பிறகு கடும் எதிர்ப்பை சந்தித்ததன் விளைவாகத் தமிழ்நாடு அரசு தலையிட்டு மூட நம்பிக்கைப் பேச்சாளர் மகாவிஷ்ணு மீது வழக்குப் பதிவு செய்து காவல் துறை கைது செய்துள்ளது.

இது போன்ற நிகழ்வுகள் தனியார் பள்ளிகளில் எவ்விதத் தடையும் இன்றி நடந்து கொண்டுதான் இருக்கின்றன. அரசுப் பள்ளிகளிலும் தன்னம்பிக்கை, எதிர்காலம், தேர்வை எதிர்கொள்ளுதல்... இப்படியான தலைப்பிட்டு ஆன்மீகச் சொற்பொழிவுகள் நடந்து கொண்டுதான் இருக்கின்றன. சமீபத்தில் விநாயகர் சதுர்த்தி விழாக்களை அரசுப் பள்ளிகளில் கொண்டாட வேண்டுமென்று சுற்றறிக்கை வெளியிடப்பட்டதாகக் கூட செய்திகள் வந்தன. கடும் எதிர்ப்புக்குப் பிறகு அந்தச் சுற்றறிக்கை பின்வாங்கப்பட்டது

அண்மையில், கோவையில் உள்ள ஒரு அரசுப் பள்ளி மைதானத்தில் ஆர்.எஸ்.எஸ் பயிற்சி வகுப்பு நடத்தப்பட்டது; கடும் எதிர்ப்புக்குப் பிறகு நிறுத்தி வைக்கப்பட்டது. இப்படித் தமிழ்நாட்டில் உள்ள அரசுப் பள்ளிகளில் ஆங்காங்கே வெளிஉலகத்துக்குப் பெரியளவில் தெரியாமல் அதிகாரிகள் ஆதரவுடன் 'சாகா'க்கள் நடந்து கொண்டுதான் இருக்கின்றன. கராத்தே, சிலம்பம், யோகா போன்ற கலைகளைப் பயிற்றுவிப்பதாக மூளைச் சலவை செய்து மாணவர்களை வரவழைத்து ஆர்.எஸ்.எஸ். சாகா வகுப்பை நடத்துகிறார்கள்.

அரசுப் பள்ளிகளில் மே மாதம் நடக்கும் மாணவர் சேர்க்கை தற்போது சரஸ்வதி பூசையை முன்னிட்டும் நடத்தப்படுகிறது. சரஸ்வதி பூசை அன்று ஆசிரியர்களின் கால்களை மாணவர்களை வைத்து கழுவ வைக்கும் கேவலம் அரங்கேறி வருகிறது. இது அரசுப் பள்ளி, தனியார் பள்ளி என நாம் பிரித்து பார்க்க கூடாது. எந்தப் பள்ளியாக இருந்தாலும் மூடநம்பிக்கை நிகழ்வுகள் முற்றிலும் தடை செய்யப்பட வேண்டும். பள்ளிகளின் மூலமாகத்தான் தன் இந்துத்துவப் பணிகளை சங்பரிவார் கும்பல் சிறப்பாகச் செய்து கொண்டிருக்கின்றன என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

சமூக வலைதளங்களில் மேற்கண்ட பள்ளிச் சொற்பொழிவு நிகழ்வு பரவலாகாமல் இருந்திருந்தால் பள்ளிக்கல்வித்துறை வேடிக்கை பார்த்துக் கொண்டுதான் இருந்திருக்கும். ஏனென்றால் திராவிட மாடல் என்று சொல்லிக் கொண்டே இந்து அறநிலையத்துறையும் கல்வி துறையும் இந்துத்துவத்திற்கு சேவகம் செய்து கொண்டுதான் இருக்கின்றன.

**தேவை மூட நம்பிக்கை ஒழிப்புச் சட்டம்:**

மூடநம்பிக்கை சார்ந்து முற்பிறவி, பாவம், புண்ணியம் போன்ற காரணங்களைக் காட்டி அது தொடர்பான குற்றங்களைக் கையாளும் தனிப்பட்டச் சட்டம் எதுவும் இந்தியாவில் இல்லை. அதை இந்திய அரசு விரும்பவும் இல்லை. இந்தியா என்கிற கட்டமைப்பே, இந்துத்துவக் கட்டமைப்பாகத் தான் இருக்கின்றது. இந்துத்துவக் கட்டமைப்பு இந்து மதத்திற்குச் சேவகம் செய்வது தான்.

இந்து மதம் என்பது பார்ப்பனியம், மூடநம்பிக்கை உள்ளிட்ட படு பிற்போக்கான கருத்தியலின் சாரம்தான். எனவேதான் இந்திய அரசு இந்து மதத்தின் மீது தாக்குதல் தொடுக்கும் எந்தச் சட்டங்களையும் அனுமதிப்பதில்லை. எனவே, தமிழக அரசு தனது எல்லைக்குட்பட்ட தமிழ்நாட்டில் மூடநம்பிக்கை ஒழிப்புச் சட்டத்தை உடனே நிறைவேற்றி நடைமுறைப்படுத்த வேண்டும். இப்படியான சட்டத்தை கர்நாடக அரசு ஏற்கனவே கொண்டு வந்துவிட்டது.

மனித குலத்திற்கு விரோதமான தீய பழக்கவழக்கங்களைத் தடை செய்யும் நோக்கில் கர்நாடகா தடுப்பு மற்றும் ஒழிப்பு சட்டம் எனப்படும் மூடநம்பிக்கை எதிர்ப்பு சட்டத்தை 2017 இல் கர்நாடக அரசு கொண்டு வந்துவிட்டது . இந்த சட்டம் மத சடங்குகளுடன் இணைக்கப்பட்ட "மனிதாபிமானமற்ற" நடைமுறைகளை முழுமையாக எதிர்க்கிறது. பெரியார் மண் எனச் சொல்லிக் கொள்ளும் தமிழ்நாட்டில் இப்படி ஒரு சட்டம் இல்லாதது அவலத்திற்குரியது. எனவே தமிழக அரசு உடனே மூடநம்பிக்கை ஒழிப்புச் சட்டத்தை நிறைவேற்றி நடைமுறைப்படுத்த வேண்டும்.

சட்டத்தைக் கொண்டு வருவதோடு நிறுத்திக் கொள்ளாமல் அறிவியல் கண்ணோட்டத்தை மாணவர்கள் நடுவில் விதைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். பொதுமக்களிடையேயும் பகுத்தறிவுக் கருத்துகளை விதைக்க வேண்டும்.

நமது அரசியல் சாசனத்தின் 51 - ஏ(எச்) பிரிவு - "இந்திய குடிமக்களிடையே அறிவியல் மனப்பாங்கை வளர்த்து, கேள்வி கேட்கும் திறனை வளர்ப்பது, சீர்திருத்தம், மனிதநேயம் பரப்புதல் ஒவ்வொரு குடிமகனின் அடிப்படைக் கடமை என்று கூறுகிறது

அரசுப் பள்ளி மற்றும் தனியார் பள்ளி மற்றும் கல்லூரிகளில் ஆன்மீகச் சொற்பொழிவுகள் தடை செய்யப்பட வேண்டும். அதற்கு மாற்றாக அறிவியல் கண்ணோட்டத்தில் பகுத்தறிவு பரப்புரைகள் மேற்கொள்ள வேண்டும். சான்றாக மந்திரமா தந்திரமா என்பது போன்ற நிகழ்ச்சிகள் அனைத்துப் பள்ளிகளிலும் கட்டாயம் நடத்தப்பட வேண்டும்.

**கல்வியை மாநிலப் பட்டியலுக்கு மாற்ற வேண்டும்:**

சமூகத்தில் நிகழும் மூடநம்பிக்கைகளின் மூலக் காரணங்களை கல்வி முறையின் மூலம் மட்டுமே விளக்கப்படுத்த முடியும். அறிவியல் கண்ணோட்டத்தை மற்றும் விமர்சன சிந்தனையை மாணவர்களிடம் ஊக்குவித்து வளர்த்தெடுக்க வேண்டும். அந்தக் கல்வித்துறையை இந்திய அரசு தன் கையில் வைத்துக் கொண்டு கல்வியை காவிமயமாகவும் கார்பரேட் மயமாகவும் மாற்றிக் கொண்டிருக்கிறது.

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை வடிவமைக்கும் போது, கல்வியை இந்தியப் பட்டியலில், மாநிலப் பட்டியலில் அல்லது பொதுப் பட்டியலில் இவற்றில் எதில் சேர்ப்பது என்பது நீண்ட தருக்கத்திற்குப் பிறகு இறுதியில் கல்வி மாநிலப் பட்டியலில் இருப்பதுதான் சரியானது என்று முடிவு செய்து, கல்வியை மாநிலப் பட்டியலில் சேர்த்தனர்.

இந்தியாவில் 1975 - ம் ஆண்டு முதல் 1977- ம் ஆண்டு வரை அமலில் இருந்த அவசர காலக்கட்டத்தில் கல்வி பொதுப்பட்டியலுக்குக் கொண்டு செல்லப்பட்டது. அரசியலமைப்புச் சட்டம் 57 வது பிரிவில் 42வது சட்ட திருத்தம் மூலமாகக் கல்வியானது மாநிலப் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டுப் பொதுப் பட்டியலில் சேர்க்கப்பட்டது. அதற்கு முன்பு வரை கல்வி மீதான அனைத்து முடிவுகளும் எடுக்க மாநிலங்களுக்கு உரிமை இருந்தது. குறிப்பாகப் பாடத்திட்டம், பாடத் தொகுப்பு மற்றும் மாணவர் சேர்க்கை தொடர்பாக எந்த முடிவுகளையும் மாநிலங்களே எடுத்து வந்தது. தற்போது எல்லா வகையிலும் கல்வித்துறையில் ஒன்றிய அரசின் தலையீடு உள்ளது.

இந்தியா என்பது பல மாநிலங்கள் அடங்கிய தேசம். ஒரு நாடு, ஒரு மொழி, ஒரு மதம் என்ற தத்துவம் என்ற அடிப்படையில் நாடு முழுவதற்கும் ஒரே கல்விக் கொள்கை என்பதும் பொருத்தமற்றது. கல்வி கடைக்கோடி வரை சென்றடைவதை மாநில அரசுகள் மட்டுமே உறுதி செய்ய முடியும். மொழி, பண்பாட்டில் பன்முகத்தன்மை கொண்ட இந்தியாவில் பொருளாதார சமூக ஏற்றத்தாழ்வுகளைக் கொண்ட இந்த நாட்டில் ஒரே மாதிரியான கல்வி என்பது பிற்போக்குத்தனமானது.

கல்விக்கு ஆகும் செலவில் 85 விழுக்காடு அந்தந்த மாநில அரசுகளே செலவழித்துக் கொண்டிருக்கின்றன. புதிய கல்விக் கொள்கை என்ற பெயரில் இந்துத்துவ கல்வியைத் திணிப்பதற்கு மோடி அரசு முயற்சி செய்து கொண்டிருக்கும் இந்த வேலையில் கல்வியை மாநிலப் பட்டியலுக்குக் கொண்டுவதற்கான முயற்சியைத் தமிழக அரசு தீவிரப்படுத்த வேண்டும்.

கடந்த 2021ஆம் ஆண்டு தி.மு.க. அரசு பொறுப்பேற்றவுடன், 'மாநிலத்திற்கெனப் புதிய கல்விக் கொள்கையை உருவாக்க ஒரு குழு அமைக்கப்படும்' என்று அறிவிக்கப்பட்டது. அதற்கென அமைக்கப்பட்ட குழு தனது பரிந்துரையைக் கடந்த மாதம் மாநில அரசிடம் அளித்துள்ளது.

அதில், கல்வியை மீண்டும் மாநிலப் பட்டிலுக்குக் கொண்டுவரத் தேவையான முயற்சிகளை மாநில அரசு மேற்கொள்ள வேண்டும் எனப் பரிந்துரை செய்துள்ளது. மேலும், பள்ளிக் கல்வியில் தமிழே முதல் மொழியாக இருப்பது அவசியமானது. ஆரம்பக் கல்வியில் இருந்து பல்கலைக் கழக மட்டம்வரை தமிழே பயிற்றுமொழியாக இருக்க வேண்டும். தமிழ்ப் பல்கலைக் கழகத்தை சர்வதேச அளவுக்கு உயர்த்துவதோடு, தமிழ்ச் சங்கத்தால் நடத்தப்படும் கல்லூரியை மேம்படுத்த வேண்டும்.

சாதியை ஒழிப்பதை சமூக இலக்காகக் கொண்டு, சமத்துவத்தை நோக்கி நகரச் செய்வதாகப் பாடத்திட்டம் இருக்க வேண்டும் போன்ற பல்வேறு கோரிக்கைகளை வழங்கி உள்ளது. எனவே தமிழக அரசு உடனடியாக இந்தக் குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த வேண்டும்.

கல்வியை இன்னும் பொதுப் பட்டியலில் நீட்டிக்கச் செய்வது கூட்டாட்சிக் கட்டமைப்புக்கு அச்சுறுத்தலாக இருக்கும் என்பதை தமிழக அரசு உள்வாங்கிக் கொண்டு கல்வியை மாநிலப் பட்டியலில் கொண்டு வருவதற்குத் தீவிரமாக முயற்சி செய்ய வேண்டும். இல்லாவிடில் கல்வி இந்துத்துவமயமாவதையும், கார்ப்பரேட்மயமாவதையும் தடுக்க முடியாது.

---





**பாவலரேறு பெருஞ்சித்திரனார் எழுத்தடைவுகள்**

**அணியமாகிக் கொண்டிருக்கின்றன..**

===============

**16 தொகுதிகள்**

=====================================

**இன்னும் இரண்டு மாதத்தில்**

**வெளியீட்டு நிகழ்ச்சி நடக்க இருக்கிறது..**

=====================================

**பதினாறு தொகுதிகளும் 12,000 உருவா..**

**முன் வெளியீட்டுத் திட்டத்தில் பதிவு செய்வோர் 10,000 உருவா..**

**கட்டினால் போதும்..**

=================

**10 இணைகளுக்கு முன்பதிவு செய்வோருக்கு.. (ஓர் இணை அன்பளிப்பாக)**

**11 இணையாகத் தரப்பெறும்..**

**செப்டம்பர் 2024 இறுதிக்குள் பதிவு செய்யுங்கள்..**

==============

**தொடர்புக்கு:**

**9841668320, 9092948002**

# பெரியார் கொள்கைகள் – பெருஞ்சித்திரனார் கொள்கைகள் – ஒன்றுபடும் புள்ளிகளும்.. விலகும் புள்ளிகளும்..

**பொழிலன்**

பாவலரேறு பெருஞ்சித்திரனார் தனித்தமிழ் இயக்கத்தைச் சார்ந்தவர் என்பதாக மட்டுமே சிலர் அறிந்திருக்கின்றனர் பரப்பி வருகின்றனர்..

அவர் தனித்தமிழ் இயக்கத்தை மக்கள் இயக்கமாக மாற்றியவர் என்பதைக் கடந்து, தமிழ்த் தேசிய அரசியலை முன்னுக்கு நகர்த்தி வலிமைப்படுத்திச் செயல்படுத்தத் தொடங்கியவர் - என்பதோடு..

தமிழ்த் தேசத்தின் அடிப்படையான மொழியியல், குமுகவியல், அரசியல், பொருளியல், பண்பாட்டியல், வரலாற்றியல், மெய்யியல் என அனைத்துக் கூறுகளிலும் மிக ஆழமாக ஆய்வு செய்து பல்வகை கருத்தாக்கங்களைக் கொள்கைகளாக அறிவிப்பு செய்தவர்..

தனித் தமிழ் இயக்கம் சாதி ஒழிப்புக்காகவோ மத ஒழிப்புக்காகவோ தொடங்கப்பட்டதன்று.. அதற்கு வகுப்பு (வர்க்க) எதிர்ப்பு நோக்கமோ, வல்லரசிய எதிர்ப்பு நோக்கமோ, தமிழ்நாட்டு விடுதலை நோக்கமோ இருந்திடவில்லை.

தனித்தமிழ் இயக்கத்தின் தலைவர்களோ உறுப்பினர்களோ சாதி ஒழிப்புச் சிந்தனை உள்ளவர்களாகவோ, மத ஒழிப்புச் சிந்தனை யாளர்களாகவோ இருந்திடவில்லை, இருந்திருக்க வேண்டும் என்றும் சொல்ல இயலாது. அவர்களிடம் வகுப்புகள(வர்க்கம)ற்ற குமுகத்தைப் படைக்க வேண்டும் என்றோ தனித் தமிழ்நாட்டைப் பெற்றெடுக்க வேண்டும் என்றோ வல்லரசிய அதிகாரங்களை வீழ்த்திட வேண்டும் என்றோ நோக்கங்கள் இருந்திடவில்லை..

மறைமலை அடிகளார் சமயக் கருத்துடையவர்.. பொதுப்படச் சாதி பற்றிய மறுப்புக் கருத்து அவரிடம் இருந்தாலும் அதை ஒழிப்பதற் காகத் தனித்திட்டத்தோடான கருத்தை அவர் கொண்டிருக்கவில்லை..

ஆரியப் பார்ப்பனிய எதிர்ப்பை மொழி அளவில் சமய அளவில் ஓரளவுக் குமுக அளவில் அவர் கணித்திருந்தார்.. மொழி அளவில் சமசுக்கிருத மறுப்பு அவரிடம் இருந்த அளவிற்கு ஆரியப் பார்ப்பனிய அதிகார எதிர்ப்பை அரசியல் அளவில் பொருளியல் அளவில் அவர் மேற்கொண்டிருக்கவில்லை..

மொழிஞாயிறு தேவநேயப் பாவாணரும் சமயக் கருத்துடையவரே.. அவரும் சாதியின் கொடுமையை உணர்ந்திருந்தாலும் அதை ஒழிப்பதற்காக எந்தத் திட்டமும் கொண்டிருக்கவில்லை.. ஆரியப் பார்ப்பனியத்தை மொழி அளவில் எதிர்த்துச் செயல்பட வேண்டும் என்பதை வலியுறுத்திய நிலையில் அதைச் செய்தாலே ஆரியம் பெருமளவில் வீழ்ந்து போகும் என்று கருத்துக் கொண்டிருந்தார்..

அதேபோல் தனித்தமிழ் உணர்ச்சி கொண்டிருந்த அண்ணல் தங்கோ, அப்பாத்துரையார் உள்ளிட்ட அறிஞர் பெருமக்களின் செயற் பாடுகளை அத்தகைய விரிவான பிற கூறுகளின் எதிர்ப்புகளை கருத்துகளாகவோ செயல்களாகவோ பார்க்க இயலாது..

ஆனால், பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களின் நோக்கமும் செயலும் தனித் தமிழ் என்பதோடு நின்றுவிடவில்லை..

தனித்தமிழ்ச் செயற்பாட்டாளர் என்றளவோடு அவரைச் சுருக்கி நிறுத்திவிட முடியாது..

அவர் சாதி மறுப்புடையவராக மட்டுமல்லாமல் சாதியை எதிர்த்துத் திட்டங்களை வகுத்துக் கொண்டு போராடக் கூடியவராகவும் இருந்தார். மதங்களற்ற தமிழ்த் தேசத்தை உருவாக்க வேண்டும் என்பது அவரின் கொள்கையாக இருந்தது.. இந்து மதத்திலிருந்து தமிழர்கள் அனைவரும் வெளியேற வேண்டும் என்று பலமுறை அறிவிப்புச் செய்து விரிவாக எழுதியிருந்தார்..

முதலாளியத்தின் கொடு நிலைகளை கடுமையாகச் சாடி அதற்கான செயற்பாடுகளோடும் இயங்கி இருக்கிறார்.. வல்லரசிய எதிர்ப்பை வலிமையாகப் பதிவு செய்திருக்கிறார்..

தமிழ்நாட்டு விடுதலை ஒன்றே தம்மின் இலக்காகவும் முயற்சியாகவும் மேற்கொண்டு அதற்காகப் பலமுறை போராடிச் சிறை சென்றிருக்கிறார்..

இத்தகையச் செயற்பாடுகள் தனித்தமிழ் இயக்கம் என்கிற இயக்கப் போக்கினை அதன் நோக்கத்தினைக் கடந்த விரிவான செயல்பாடுகளாகும்..

அதற்காகப் பாவலரேறு தனித்தமிழ் இயக்கத்தைச் சார்ந்தவர் இல்லை என்று பொருள் இல்லை.. அறிஞர்கள் நடுவில் மட்டுமே பரவி இருந்த தனித்தமிழ் இயக்கத்தை வெகு மக்கள் அளவில் மிக விரிவாகப் பரப்பியதில் பாவலரேறு பெருஞ்சித்திரனாரே முன்னுக்கு நிற்கிறார்.. தனித்தமிழ் இயக்கத்தின் செயல்வழி முன்னோடியாக நிற்கிறார்.. அண்ணல் தங்கோ அவர்கள் வெகு மக்களிடையே தனித்தமிழ் உணர்ச்சியைப் பரப்பத் தொடங்கித் தம் ஊரளவில் செயல்பட்டார் என்று சொன்னால், பாவலரேறு அவர்கள் மிக விரிந்த அளவில் உலகில் வாழும் தமிழர்கள் எல்லாம் உணரும் வகையில் பேரியக்கமாக இயங்கினார்..

தென்மொழி இயக்கத்தின் வழிதான் பாவலரேறு பெருஞ்சித்திரனார் தனித்தமிழ் இயக்கச் செயல்பாடுகளைப் பல நிலைகளில் விரிவுபடுத்தி ஆழப்படுத்திச் செயல்பட வைத்தார்..

மொழி நிலை கடந்து, அரசியல், பொருளியல், பண்பாட்டு, குமுக விடுதலைக் கண்ணோட்டங்களில் மதிப்பீடு செய்தார்.. செயல் பாடுகளை வகுக்கத் தொடங்கினார்..

தமிழை, தமிழினத்தை, தமிழ்நாட்டை ஈடேற்றுவதற்குத் தனித்தமிழ் இயக்கம் போதுமானதாக இல்லை என்கிற அளவில்தான் பாவலரேறு பல நிலைகளில் பல்வேறு இயக்கங்களைத் தொடங்கியும், கூட்டமைப்புகளை முன்னணிகளை உருவாக்கிச் செயல்பட வேண்டிய தேவை அமைந்தது..

அது ஒருபுறம் இருக்க.. அதேபோன்று,

பெரியார் திராவிட இயக்கத்தைச் சார்ந்தவர்.. திராவிடக் கருத்தியல் கொண்டவர்.. என்பதாக மட்டுமே அடையாளப்படுத்துவதும் சரியானது அன்று..

திராவிடர் அல்லது திராவிடம் என்கிற கருத்துப் பெரியாரால் தொடங்கப்பட்டதும் அன்று..

ஆரியக் கருத்துகளை மறுத்த கருத்தாடல்களை ஒருங்கிணைத்துச் சொல்வதற்குத் திராவிடர், திராவிடம் என்கிற சொல்லாக்கங்கள் பயன்படுத்தப்பட்டு வந்திருக்கின்றன..

திராவிட மொழிகள் என்பவை ஆரிய சமசுக்கிருத மூலத்திலிருந்து உருவாகிய மொழிகள் அல்லாதவற்றை அடையாளப்படுத்திச் சொல்வதற்கான சொல்லாக மொழியியல் அறிஞர்களால் பயன்படுத்தப்பட்டு வந்திருக்கின்றது..

திராவிடர் என்ற கருத்துக் கொண்டிருந்தார் அயோத்திதாசப் பண்டிதர்.

ஆந்திரம், கர்நாடகம், கேரளம் உள்ளிட்டவை அன்றைக்குத் தமிழ்நாட்டோடு இணைந்து சென்னை மாகாணம் என்று இருந்த நிலையில் உருவாகி இருந்த நீதிக் கட்சியில் திராவிடர் என்ற கருத்து அனைவரையும் இணைத்த சொல்லாகவும், ஆரியர் அல்லாத இம்மொழிகளின் மக்களாகிய பிறரை இணைத்துக் குறிக்கும் சொல்லாகவும் பயன்பாட்டில் இருந்தது. எனவே பார்ப்பனர் அல்லாதார் இயக்கத்தை முன்னெடுத்த அனைவரிடமும் திராவிடம், திராவிட நாடு பற்றிய கருத்துக் காலூன்றி இருந்தது.. தொடர்ந்து பெரியாரால் தொடங்கப்பட்ட **திராவிடர் கழகம்** ஆரியப் பார்ப்பனிய எதிர்ப்புக் கழகமாகவே குமுகச் சீர்திருத்தக் கொள்கைகளை வகுத்துக் கொண்டு செயல்பட்டது. அதிலிருந்து தேர்தலில் பங்கேற்று மாற்றம் செய்ய வேண்டும் எனத் தொடங்கப்பட்ட திராவிட முன்னேற்றக் கழகமும் திராவிடம் எனும் கருத்தை ஆரியப் பார்ப்பனியம் அல்லாதவற்றையும் அடையாளப் படுத்துவதாகவும், தெலுங்கு, கன்னட, மலையாள இணைப்பைச் சொல்வதாகவும் என இரண்டு அடையாளங்களிலுமே பயன்படுத்தியது..

எனவே திராவிடம் என்கிற கருத்தாளர்களிடமும் திராவிடக் கருத்தை மேற்கொண்டிருந்தவர்களிடமும் சாதி ஒழிய வேண்டும் என்கிற நோக்கமும், திட்டமும் இருந்திருக்கவில்லை..

அவர்கள் சாதிய வன்மங்களைக் கடுமையாக எதிர்த்து வந்த போதிலும் சாதிகளற்ற ஒரு புதிய குமுகத்தை உருவாக்க வேண்டும் எனும் திட்டத்தை அவர்கள் வகுத்திடவில்லை, சமயங்கள் எதிர்ப்பையும் அவர்கள் மேற்கொள்ளவில்லை, வகுப்பு(வர்க்க) ஒழிப்புக் கொள்கை அவர்களிடம் இல்லை.. வல்லரசிய எதிர்ப்புத் திட்டம் அவர்கள் கொண்டிருக்கவில்லை..

திராவிடம் என்று அறியப்படுகிற சொல்லுக்கு மொழி நிலையில் ஒரு பொருள் உண்டு எனில், குமுக, அரசியல் நிலையில் அதற்கு இன்னும் சில நிலைகளில் கூடுதலான பொருள் உண்டு..

பெரியார் கொள்கைகள் என்பவை திராவிடம் என்கிற சொல் விளக்குகிற பொருள்களை விட அதிகப்படியான பொருள் விளக்கம் கொண்டவை..

திராவிடம் என்று திராவிடர் கழகங்களின் உறுப்பினர் ஒருவர் அடையாளப்படுத்திக் கொள்ளுகிற பொருளுக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் உறுப்பினர் ஒருவர் அடையாளப்படுத்திக் கொள்ளுகிற பொருளுக்கும் வேறுபாடு உண்டு..

ஆனால் பெரியார் கொள்கையை அப்படி வேறுபடுத்திப் பொருள் புரிந்து கொள்ள முடியாது..

திராவிட மாதிரி என்று அடையாளப்படுத்துகிற தி.மு.கழகத்தவர் அல்லது பொதுவான ஒருவர் கடவுள் மறுப்பாளராக இருப்பதில்லை.. அதேபோல் அவர் சாதி மறுப்பாளராகவும், மத மறுப்பாளராகவும் இருப்பதுமில்லை..

இன்றைய தேர்தல் அமைப்பு முறையை மறுத்து அவர்கள் சிந்திப்பதில்லை..

ஆனால், பெரியாருக்கு இன்றைய தேர்தல் அமைப்பு முறையில் உடன்பாடு இல்லை.. அயோக்கியன் பொறுக்கித் தின்னவே அரசியல் என்பதாக மதிப்பிட்டிருந்தார்..

ஆங்கிலேய அரசாங்கம் அவரை இரண்டு முறை முதலமைச்சராக இருக்க வலியுறுத்தியபோதும் அவர் அதை ஏற்காமல் மறுத்தார்..

இருக்கக்கூடிய தேர்தல் அரசியல் அமைப்பில் போட்டியிட்டவர்களை ஆரியப் பார்ப்பனிய எதிர்ப்புக் கண்ணோட்டத்தில் இருந்தே ஆதரிக்கவும் எதிர்க்கவும் செய்தார்.. காமராசருக்காகக் காங்கிரசை ஆதரித்தார் என்பதைவிட இராஜாஜியின் சூழ்ச்சிக்காகத் திமுகவை எதிர்த்தார்..

சாதி ஒழிப்பு அரசியலில் மிக அழுத்தமான உணர்வோடு இருந்தார்.. அவர் அதற்காக ஏற்றுக் கொண்ட திட்டம் முற்றும் முழுமையும் போதுமானதா இல்லையா என்பது வேறு.. ஆனால் ஏற்றுக்கொண்ட கொள்கை போராட்ட அளவீடுகளில் பின்வாங்கிடவில்லை..

எந்த நிலையிலும் இணங்கி போனதுமில்லை..

வருண எதிர்ப்புப் போராட்டம் இல்லாத வகுப்பு (வர்க்க) எதிர்ப்புப் போராட்டம் பயனளித்திடாது என்பது அவர் கருத்தாக இருந்தது..

மார்க்சிய நெறியில் அரசு என்கிற மதிப்பீட்டை அவர் கொண்டிராமல் இருக்கலாம்.. ஆனால் இந்திய அரசைப் பார்ப்பனிய பனியா அரசாக மதிப்பிட்டிருந்தார்.. அம்பேத்கர் மதிப்பிட்டது போல் முதலாளியமும் பார்ப்பனியமுமான அதிகார வர்க்கமாகவே இந்திய அரசு அதிகாரம் இருக்கிறது என்பதை ஒத்தளவிலேயே பெரியாரும் இந்திய அரசை மதித்திருந்தார்..

எனவே, வல்லரசு எதிர்ப்பினைப் பார்க்க, இந்திய அரசியலில் இன்றைய அளவில் வளர்ந்திருக்கிற அரசியல் கூர்மை அன்றைக்கு அவரிடம் இல்லாமல் இருந்திருக்கலாம்.. ஆனால் இந்தியப் பொதுவுடமைக் கட்சி பார்ப்பனிய எதிர்ப்பு இல்லாமல் தடுமாறியதை விடப் பெரியார் கொண்டிருந்த கொள்கை தடுமாற்றம் கொண்டதாகப் பார்க்க முடியாது..

சமய எதிர்ப்பிலும், கடவுள் எதிர்ப்பிலும் அவரிடம் பொருள் முதலியல் இயங்கியல் கண்ணோட்டம் இல்லை, அவர் கொச்சைப் பொருள் முதலிய கண்ணோட்டம் உடையவர் என்பதாகச் சிலர் மதிப்பீடு செய்திருந்தாலும்.. அவர் ஏற்றுக் கொண்டிருந்த சமய மறுப்பு கடவுள் மறுப்புக் கருத்தில் உறுதியாக இருந்தார்..

தமிழ்நாடு விடுதலைப் போராட்டத் தேவையை 1938 காலந்தொடங்கியே அவர் வலியுறுத்தி வந்தார். இடையில் 1940 தொடங்கி 1956 வரை திராவிட நாடு என்ற கருத்தை அவர் கொண்டிருந்தாலும், 1956 - க்கு பிறகு தன் இறுதிக் காலம் வரை தமிழ்நாடு தமிழருக்கே என்ற முழக்கத்தை அவர் மாற்றிக் கொள்ளவில்லை..

1956 இல் தமிழ்நாடு தமிழருக்கே என அறிவித்த பொழுது, திராவிட நாடு திராவிடருக்கே என்று தான் தெலுங்கர்களையும் கன்னடர்களையும் நம்பி ஏமாந்துவிட்டதாகவும் இனி தமிழ்நாடு தமிழருக்கே என்பது மட்டுமே தீர்வு என்பதாகவும் வெளிப்படையாக அறிக்கை விடுத்தார்..

பொதுப்பட மொழி குறித்தும், தமிழ் மொழி குறித்தும் பெரியார் அவர்களிடம் தெளிவான பார்வை இருந்ததாகச் சொல்ல இயலாது..

அவர் தமிழைக் காட்டுமிராண்டி மொழி என்று சொன்னபோது தென்மொழி இதழில் பாவலரேறு பெருஞ்சித்திரனார் கடிந்து எழுதியதைக் கண்ணுற்று அதன் பிறகு அவ்வாறு அறிவிக்காமல் இருந்தார் என்பது கவனிக்கத்தக்கது..

ஆக, பெரியாரின் கொள்கையில் ஒரு பகுதியே திராவிட கருத்திய லாக ஆகுமே ஒழிய திராவிடக் கருத்தியல் அனைத்துமே பெரியாரின் கருத்து என்றோ.. பெரியாரியல் கருத்தை அப்படியே திராவிடக் கருத்தாளர்கள் பின்பற்றி வருகிறார்கள் என்றோ எண்ணுவதும் நம்புவதும் பரப்புவதும் தவறானதும் புரட்டலானதுமே ஆகும்..

எப்படித் தனித்தமிழ் இயக்கங்களின் கொள்கைகளை மட்டுமே பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்தம் கொள்கைகள் எனச் சொல்லிக் கொண்டிருக்கவில்லையோ, அப்படிச் சொல்ல முடியாதோ, கூடாதோ...

அப்படித் திராவிட இயக்கங்களின் கொள்கைகள் மட்டுமே பெரியாரின் கொள்கைகள்தாம் என்று சொல்லிவிடவும் முடியாது; கூடாது...

தனித்தமிழ் இயக்கத்தின் கருத்துகளின் வளர்ச்சியில் பாவலரேறு பெருஞ்சித்திரனாரின் கொள்கைகள் பொதுமை அறம் சார்ந்த தமிழ்த் தேச விடுதலை அரசியல் கொள்கையாக வளர்ச்சி கொண்டது..

பாவலரேறு மொழி, இனம், நாடு - எனத் தொடக்கத்தில் சிந்திக்கவும், செயல்படவும் தொடங்கினார். பின்னர் சாதி ஒழிப்பும், அரசியல் விடுதலையும், பொருளியல் விடுதலையும், பண்பாட்டு, வரலாற்று விடுதலையும் என்றெல்லாம் அளாவிச் செயல்படலானார்.

தமிழே எனக்கு உயிர் மூச்சு என்று கருத்து கொண்டிருந்த பாவலரேறு தமிழில் சமசுகிருதத் திணிப்பையும், இந்தித் திணிப்பையும் கடுமையாக எதிர்த்தார்.

உயர் நெறி மன்றத்தில் மட்டுமன்றி தில்லி உச்ச நெறி மன்றத்திலும் தமிழிலேயே தருக்கமிட்டார்.

தமிழுக்காக உலகத் தமிழ்க் கழகத்தையும், தமிழினத்திற்காக உலகத் தமிழின முன்னேற்றக் கழகத்தையும் தொடங்கி நடத்தினார்.

மொழியையும் நாட்டையும் ஆளாமல் துஞ்சுவதில்லை எனும் கொள்கை நோக்கில் 1959 - இல் தென்மொழி இதழைத் தொடங்கினார். 1965 - இல் தமிழ்ச்சிட்டு - எனும் பெயரில் இளைய தலைமுறையினரைத் தட்டி எழுப்ப இதழ் நடத்தினார். 1982 - இல் தமிழ்நிலம் எனும் அரசியல், பொருளியல் விடுதலைக்கான இதழைக் கொண்டு வந்தார்.

புலவர் கலியபெருமாள், தோழர் தமிழரசன், வே. ஆனைமுத்து, சாலை இளந்திரையன், எசு. என். நாகராசன் உள்ளிட்டவர்களோடு இணைந்து தமிழக வரலாற்றிலேயே முதன்முதலில் 'தமிழக மக்கள் விடுதலைக் கூட்டணி'யைக் கூட்டி இயங்கினார்.

தமக்குத் தூய தமிழ் உயிர்க் கொள்கையானாலும், தமிழ்நாட்டு விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என்பதற்காகத் தம் தனித்தமிழ்க் கொள்கையைக் கூடக் கொஞ்சம் தள்ளி வைப்பேன் என்றார்.

பெரியாரின் ஆரியப் பார்ப்பனிய எதிர்ப்பிலும், சாதி ஒழிப்பிலும், வைதீகப் புராணங்கள், வேத சாஸ்திரங்களின் மீதான கடும் எதிர்ப்பிலும், இந்திய அரசு எதிர்ப்பிலும், தமிழ்நாடு விடுதலைக் கருத்திலும் பாவலரேறுவுக்கு முழுமையாக உடன்பாடு இருந்தாலும், அவரின் மொழிக் கருத்துகளில் உள்ள பிழையைக் கடுமையாகவே சாடினார்.

"அவர் பேசிய பேச்சுகளை ஏதென்சு நகரைச் சுற்றிவந்த சாக்ரடீசும் பேசியிருக்க முடியாது. உலகப் பெரும் பேச்சாளர் என்று பெயரெடுத்த மெகசுதனிசும் பேசியிருக்க முடியாது. அவர் சுற்றிய தொலைவைக் கிரேக்க மன்னன் அலெக்சாண்டரும் சுற்றியிருக்க முடியாது. அவர் பிரெஞ்சு மாமறவர் நெப்போலியனைவிடப் போரிட்டவர். உருசிய இலெனினைவிடப் பொதுமக்களை நேரக்கு நேராகக் கண்டுபேசியவர். குருசேத்திரப் பாரதப் போரைவிட ஆரியத்தின் மேல் அவர் தொடுத்தப் போர் மிகப் பெரியது. கடுமையானது. வேறு எவரும் தொடுக்க அஞ்சியது. நினைத்துத் தொடை நடுங்கியது"

- என்று 1971 இல் பெரியாரைப் பற்றி பாவலரேறு பெருஞ்சித்திரனார் எழுதினார்.

"பெரியார் ஒரு கட்சியின் தலைவர் அல்லர். ஓர் இனத்தின் தலைவர். ஒரு காலத்தின் தலைவர். ஒரு வரலாற்றின் நாயகர். அவர் தோன்றியிருக்கவில்லையானால், ஓர் இனத்தின் அடிமை வரலாறே முற்றுப் பெற்றிருக்காது. ஒரு நாட்டின் மேல் போர்த்துக் கிடந்த இருள் விலகியிருக்காது. தமிழனின் தலையெழுத்தே மாற்றப் பெற்றிருக்காது. தன்மானமற்ற நம் இனம் ஆரியச் சேற்றில் மேலும் மேலும் அழுந்திக் கதிகலங்கிப் போயிருக்கும்"

- என்று தன் அழுத்தமானக் கருத்தைப் பதிவு செய்ததோடு, பல்கலைக்கழகங்களே பெரியாருக்கு முனைவர் பட்டம் கொடுத்துப் பாராட்டுங்கள் என்று அதே காலத்தில்(1971) பாவலரேறு பெருஞ்சித்திரனார் எழுதியிருந்தார்.

பெரியார், தமிழ் ஆராய்ச்சி என்று எழுதிய கட்டுரைக்காகவும், தமிழைக் காட்டுமிராண்டி மொழி என்று எழுதியதற்காகவும் 1967 ஆம் ஆண்டில் மிகக் கடுமையாகப் பாவலரேறு பெரியாரைச் சாடி தென்மொழியில்,

'அவர் ஓர் அரசியல்காரர் அல்லது குமுகாயச் சீர்திருத்தக்காரராக இருக்கலாம். ஆனால் ஒரு மொழிப் பேராசிரியராகவோ, வரலாற்றுப் பேராசிரியராகவோ, மக்களியல் பேராசிரியராகவோ ஆகிவிட முடியாது. அவர் கூறியிருக்கின்ற தமிழைப் பற்றிய கருத்துகள் தம்மை ஒரு மொழிப் பேராசிரியராக எண்ணிக் கொண்டு கூறிய கருத்துகளாகும். எனவே அவை அவருக்குத் தொடர்பில்லாத கருத்துகளே என்று விடுக்கவும்"

என்றும்,

"இவர் அரசியலைப் பொறுத்தவரை ஒரு இலெனினாக இருக்கலாம், குமுகவியலைப் பொறுத்தவரையில் ஒரு கமால் பாட்சாவாக இருக்கலாம். பொருளியலைப் பொறுத்தவரையில் ஒரு மார்க்சாக இருக்கலாம். சீர்திருத்தத் துறையைப் பொறுத்தவரையில் ஒரு பெரியாராகவும் இருக்கலாம். ஆனால் மொழித் துறையைப் பொறுத்தவரையில் இவர் வெறும் இராமசாமிதான்"□ என்று மிகக் கடுமையாக எழுதினார் பாவலரேறு பெருஞ்சித்திரனார்.

அதற்கு முன்பும் பின்பும் பலவகையில் பெரியாரைப் பாராட்டிப் பாடல்களும், கட்டுரைகளும் எழுதியிருந்தார் பாவலரேறு பெருஞ்சித்திரனார்.

"திருவள்ளுவருக்குப் பின் தந்தை பெரியாரைத் தவிர வேறு எவரையும் தம்மால் முழு அறிஞராக முழுத் தலைவராக ஏற்றுகொள்ள முடியவில்லை" என்று 1989 இல் சிந்தனையாளன் மலரில் எழுதியிருந்தார் பாவலரேறு.

பெரியாரை இப்போது சிலர் மறுக்கின்றனர். மறுக்கின்றனர் என்பதைவிட எதிர்க்கின்றனர், இழிவுபடுத்துகின்றனர் என்றுகூடக் காணலாம்.

ஏன் அவர்கள் அவ்வாறு செய்கின்றனர்?

பெரியார் பிறப்பால் தமிழரல்லர், அவர் கன்னடத்தைத் தாய்மொழியாகக் கொண்டவர் என்றும், அவர் தமிழர் எனத் தமிழர்களை அடையாளப்படுத்தாமல் திராவிடர் என அடையாளப்படுத்தித் தமிழ்த் தேச எழுச்சிக்குத் தடையாக இருந்தார் என்றும் அவரைக் குற்றப்படுத்துகின்றனர்.

தமிழ்நாடு விடுதலை அடையவேண்டும் என்பதான கருத்துத் தமிழக வரலாற்றில் 1938லேயே தொடங்கிவிட்டதாயினும், அக்கருத்து அதன் தொடக்கத்திலேயே விடுதலை அரசியலைத் தெளிவானதாய்ப் பெற்றிருக்கவில்லை. அக்கருத்தை முன்வைத்தவர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு கண்ணோட்டத்தில் முன்வைத்தனர்.

இன்றைய அளவிலும் தமிழ்த் தேச விடுதலையை முன்மொழியும் இயக்கங்கள் பலவும் எவ்வாறு பல்வேறு அளவீடுகளில் அவ்விடுதலைக் கருத்தை விளங்கிக் கொள்கிறார்களோ, அப்படித்தான் அந்தக் காலத்திலும் விளங்கியிருந்தார்கள்.

1938 இல் திருச்சி மாநாட்டில் இயற்றப்பட்ட தீர்மானம் முதன்முதலில் தமிழ்நாடு தமிழருக்கே என இருந்தாலும், நிறைவேற்றப்பட்டதான

**தமிழ்நாடு இதழுக்காக நன்கொடை வழங்கியவர்கள் அனைவருக்கும் தமிழ்நாடு இதழ்க் குழு நன்றி தெரிவித்துக் கொள்கிறது..**

| | |
|---|---|
| திரு. தென்முகநம்பி , சென்னை | 1000 |
| தோழர் செங்குட்டுவன், ஆவடி | 500 |
| தோழர் நீ. இளங்கோ, சிவகங்கை | 500 |
| முனைவர் முத்தமிழ், சென்னை | 500 |

அத் தீர்மானமே போதுமான விளக்கங்களைக் கொண்டிருக்க வில்லை என்பதை அறியமுடியும்.

4.8.1940 இல் திருவாரூரில் நடைபெற்ற தென்னிந்திய நலவுரிமைச் சங்க மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்:

"திராவிடர்களுடைய கலை, நாகரிகம், பொருளாதாரம் ஆகியவை முன்னேற்றமடைவதற்கும், பாதுகாப்பதற்கும் திராவிடர்களின் தேசமாகிய சென்னை மாகாணம் இந்திய மந்திரியின் கீழ் ஒரு தனிநாடாகப் பிரிக்கப்பட வேண்டும்" என்கிற வகையில் விடுதலையைப் பேசியது.

1940 இல் சென்னை (மாகாணம்) தலை மாநிலம்(பிரசிடென்சி) என்கிற அளவிலேயே இருந்ததும், இன்றைய ஆந்திராவின் நெல்லூர் வரையிலும், சில கருநாடகப் பகுதிகளும், கேரளத்தின் பல பகுதிகளும் இணைக்கப்பட்டதாகவே சென்னைத் தலைமாநிலம் இருந்தது. எனவே, அவற்றை இணைத்தப் பகுதிகளை அடையாளப்படுத்தியே திராவிட நாடு என்று பேச வேண்டியிருந்தது.

மேலும், அன்றைய பிரிட்டிசு ஆட்சியரே இந்தியாவை ஆண்டதால், சென்னை தலைமாநிலத்தை நேரடி அரசின்கீழ்க் கொண்டுவர வேண்டும் என்ற அளவிலேயே விடுதலை பற்றிய விளங்குதல்கள் இருந்தன.

(இந்த இடத்தில், இந்தியப் பொதுவுடைமைக் கட்சிகளின் மொழித் தேச உரிமை அரசியல் எவை எனவும், தமிழ்த் தேச இயக்கங்கள் தமிழ்நாடு விடுதலை குறித்து வைத்திருந்த தொடக்கக் கால அரசியல் மதிப்பீடுகள் எப்படியானவை என்பதையும், அவற்றை அவை செழுமைப்படுத்தி வளர்த்துக் கொண்டிருந்த முறைகளையும் ஒப்பிட்டுப் பார்த்தால், பெரியாரின் தமிழ்நாடு விடுதலை அரசியலின் படிநிலை வளர்ச்சி நிலை விளங்கும்.) அதன்பிறகு அக் கருத்து படிப்படியே வளர்ந்ததைக் காணமுடியும்.

1947 இல், இந்தியா விடுதலை பெற்றதை விடுதலை என்று கொண்டாட இயலாது, அது ஓர் அதிகாரக் கைமாற்று, எனவே அது நமக்கு இழவு நாள் என்று அறிவித்தவர் பெரியார் ஒருவரே.

'இந்துசுத்தான் 'சுயராட்சியம்' என்று கொண்டாடப் போகும் வடநாட்டு ஏகாதிபத்திய ஆட்சி, பிரிட்டிசாருக்கு ஏஜெண்டாக, வடநாட்டுப் பிர்லா, பஜாஜ் குழுவினர் செய்துள்ள ஒப்பந்த ஆட்சியேயன்றி, சுயாட்சி என்று எந்த அரசியல் நிபுணராலும் கூறமுடியுமா?" என்று மிக விரிவாகக் கேள்வியெழுப்பி மறுத்தார்.

அந்தவகையில் இந்தியப் பொதுவுடைமைக் கட்சியின் எந்தத் தலைவரும் சரி, தமிழ் அறிஞர்கள், கருத்துடையவர்கள் எவரும் அவ்வாறு அக்காலத்தில் அறிக்கைவிடவில்லை, கருத்தை வெளிப்படுத்திடவில்லை என்பதை அறிய வேண்டும்.

1956□ மொழிவழி மாநிலப் பகுப்புக்குப் பின்னர் 'திராவிடர் நாடு' என்று அடையாளப்படுத்துவதைத் தவிர்த்துவிட்டுத் 'தமிழ்நாடு விடுதலை' என்றே முழங்கியும், வலியுறுத்தியும் வந்தார் பெரியார். பார்ப்பனர் அல்லாதாரை அடையாளப்படுத்திட வேண்டிக் கால்டுவெல், அயோத்திதாசப் பண்டிதர் உள்ளிட்டு அக்கால அறிஞர்கள், ஆய்வாளர்கள் பலர் பார்ப்பனர் அல்லாதார் அனைவரையும் பொதுப்பட திராவிடர் என அழைத்திட்ட வகையிலேயே பெரியாரும் அடையாளப்படுத்தினார்.

'இனியாவது, 'தமிழ்நாடு தமிழருக்கே' என்று ஆரவாரம் செய்யுங்கள்! உங்கள் கைகளில் 'தமிழ்நாடு தமிழருக்கே' எனப் பச்சைக் குத்திக் கொள்ளுங்கள். உங்கள் வீடுகள்தோறும் 'தமிழ்நாடு தமிழருக்கே' என்ற வாசகத்தை எழுதிப் பதியுங்கள். நம் வீட்டுக்குள் அன்னியர் புகுந்து கொண்டதோடு அல்லாது, அவர் நம் எசமான் என்றால் நமக்கு இதைவிட மானமற்றத் தன்மை இழிதன்மை வேறு என்ன எனச் சிந்தியுங்கள்.

புறப்படுங்கள், தமிழ்நாட்டுக்குப் பூட்டப்பட்ட விலங்கை உடைத்துச் சின்னாபின்னமாக்குங்கள் என்று 1957 (திசம்பர் 3ஆம் நாள் விடுதலையில்) எழுதியுள்ளார்.

தமிழ்நாடு நீங்கலாக இந்தியப் படத்தை எரிக்கச் சொல்லியதற்கும், முன்னெடுத்து நிகழ்ச்சிகள் நடத்தியதற்கும் தடுப்புக்காவல் சட்டத்தில் 1960 இல் சிறையிலிடப்பட்டார்.

'சுதந்திரத் தமிழ்நாடு ஏன்' என்ற சிறுநூலை வெளியிட்டார்.

அதன்பிறகும் ஆங்காங்கே நிகழ்ச்சிகளில் தமிழ்நாடு விடுதலையை வலியுறுத்தித் தொடர்ந்து பேசி வந்தவர் 1973 இல் தாம் மறையும் வரை தமிழ்நாடு விடுதலைக்காகப் பெரும் போராட்டமாக முன்னெடுத்து நடத்த இயலாவிட்டாலும் தொடர்ந்து பேசி வந்தார்.

தன் உடல்நிலை ஒத்துழைக்காத போதும் தியாகராயர் நகரில் நடைபெற்ற இறுதிச் சொற்பொழிவில் தன் மூச்சுப் போகும் நிலையிலும் தமிழ்நாடு விடுதலையை வலியுறுத்தினார்.

வடநாட்டான் கடைமறியல், இந்தியக் கொடி எரிப்பு, தமிழ்நாடு நீங்கலாக இந்தியப் பட எரிப்பு என்று போராட அழைத்தோடு, போராடிப் பெற வேண்டிய நிலையில் போராடாமல் சட்டமன்ற, நாடாளுமன்றத்திற்குச் செல்ல விரும்புகிறவர்கள் பித்தலாட்டக் காரர்கள் - என்று சாடினார்.

1940 - இலும், 1942 - இலும், சென்னைத் தலைமாநில முதலமைச்சராகப் பொறுப்பேற்று அமைச்சரவையைக் கூட்டும்படி ஆளுநர் அழைத்தபோதும், பெரியார் அதை ஏற்கவில்லை என்பதை இந்த இடத்தில் இணைத்து உணரவேண்டும்.

பலரும் அறிந்து வைத்திருப்பதுபோல் அவர் கடவுள் மறுப்புக் கருத்துக்காகவே பெரும்பொழுது உழைத்தவர் அல்லர். அவரின் முனைப்பு பல்துறை சார்ந்தது. இட ஒதுக்கீடு தொடங்கி சாதி ஒழிப்பு நோக்கிய வகுப்புவாரித்துவம், இந்தி எதிர்ப்பு, பெண்ணுரிமை, மூடநம்பிக்கை எதிர்ப்பு, முதலாளிய எதிர்ப்பு, வடநாட்டான் எதிர்ப்பு, இன விடுதலை, தமிழ்நாட்டு விடுதலை என அவர் எடுத்து செயலாற்றிய பரப்பு விரிந்தது.

இவற்றில் எவருக்காகவும், எந்த அடக்குமுறைகளுக்காகவும் தன் கருத்துகளை கைநெகிழ்த்தவரோ, மாற்றிக் கொண்டவரோ அல்லர். தமிழ்மொழிபற்றிய அவரின் சில கருத்துகூட பிழையான கருத்துகளே அன்றி, யாரையும் நிறைவுபடுத்துவதற்காக அவர் பொய்யாகப் பேசியவை அன்று. யாருக்கும் அஞ்சிக்கொண்டு போராடாமல் இருந்தவரும் அல்லர்.

ஆனால், அவர் காலத்தில், தமிழ்நாடு விடுதலை குறித்துப் பேசிய பலரும் இடைமுறிந்துப் போனதும் பிறருக்காக மாற்றிப் பேசியதும், அடக்குமுறைக்கு அஞ்சி அடங்கிப் போனதும்போல் பெரியார் இருந்திடவில்லை என்பதை உணரவேண்டும்.

1963 - பிரிவினை தடைச் சட்டத்திற்காகத் திராவிட நாடு கேட்பதற்கான காரணங்கள் அப்படியே இருக்கின்றன நாங்கள்தாம் கைவிட்டுவிட்டோம் - எனத் திமுக சொன்னதுபோல், தான் பேசிய கருத்துக்கு நேர்மாறாய்ப் பேராயக் கட்சியின் இந்திய அரசு அழைத்துத் தந்த பாராட்டை அண்ணல் தங்கோ ஏற்றுக் கொண்டது போல், 1938 இந்தி எதிர்ப்பு மாநாட்டில் தவிர மறைமலையடிகள் வேறு எங்கும், வேறு எப்போதும் தமிழ்நாடு விடுதலை குறித்துப் பேசாததுபோல், தம் தமிழ்த்தேசியக் கருத்துக்கு நேர்மாறாய் இந்திய தேசியத்தில் ஈ.வெ.கி. சம்பத் கரைந்ததுபோல், பிற்காலங்களில் இராசாசியுடன் கைகோர்த்துக் கொண்டு தமிழுக்கு எதிராகவும், தமிழ்நாட்டு விடுதலைக்கு எதிராகவும் தமிழீழத்தை எதிர்த்தும், ம.பொ.சி. பேசியதுபோல், இடையிடையே மேடையில் பேசியதுதவிர வேறு போராட்டம் ஏதும் செய்யாமல் கி.ஆ.பெ. விசுவநாதம் அவர்கள் அடங்கிப் போனது போலெல்லாம் பெரியார் எப்போதும் இருந்திடவில்லை.

சில நேரங்களில் அவர் பிழைபட சில செய்திகளைப் பேசியதைச் சுட்டிக் காட்டுகிற இன்றைக்கு இருக்கிற சிலரின் கருத்துகள் பிழைபாடு இல்லாமலும் முரண்பாடு இல்லாமலும் வளர்ந்ததாகப் பார்க்க முடியாதுபோலவே, பெரியாரின் பேச்சிலும் சில பிழைகள் உண்டு. ஆனால் அவ்வகையில் சரியான சுட்டிக்காட்டல்களைப்

பெரியார் ஏற்காமல் விட்டதுமில்லை என்பதையும் அறியவேண்டும்.

பெரியார் செய்யும் பெரும்பிழை என்று தமிழ்குறித்துப் பெரியாரின் கருத்தைப் பிழையெனப் பாவலரேறு 1967 - இல் திறனாய்ந்து எழுதிய கருத்துகளைப் பெரியார் படித்து ஏற்றுச் சிந்தித்தது மட்டுமன்றி, பாவலரேறு எழுதிய கருத்தை மறுத்துப் பிறர் எழுதியதை விடுதலையில் வெளியிடாமல் இருந்ததையும் தென்மொழியிலேயே பாவலரேறு பதிவு செய்துள்ளார்.

ஆக, பெரியாருடைய கருத்துகள் மட்டுமன்று, எவருடைய கருத்துகளானாலும் திறனாய்வுக்குரியவையே.

ஆனால் பெரியார் பிறப்பால் கன்னடர், இன்ன பிறப்பினர் அதனால் அவரின் கருத்து இப்படியாகத்தான் இருக்கும் என்ற கண்ணோட்டத்தில் மதிப்பிடுகிற ஆரியப் பார்ப்பனிய வருணாச்சிரமக் கண்ணோட்டத்தை நாம் ஏற்றிட முடியாது.

ஒருவர் என்ன கருத்துடையவர், யாருக்காக உழைப்பவர், என்ன வகையான நடைமுறைகளைக் கொண்டிருப்பவர் என்பதே ஆய்வுக்குரியவையே அன்றி, என்ன பிறப்புடையவர் என்ற கண்ணோட்டம் தவறானது மட்டுமன்றி இழிவானதுமாகும்.

இந்தவகையில் பெரியாரின் சில பிழையான கண்ணோட்டங்களை, செயல்பாடுகளை நாமும் திறனாய்ந்து பேசியிருக்கிறோம். அவ்வகையில் அப் பிழைகளை ஓரமாக வைத்துவிட்டு, அவர் மேற்போட்டுக்கொண்டு உழைத்த பெரும் கொள்கைச் செயற்பாடுகளை மதிப்பிடுவதும், அவற்றை ஏற்றுக் கொண்டு நாமும் செயல்பட வேண்டும் என்பதுமே இன்றைய காலத்தின் தேவை என்பதை உணர்ந்தாக வேண்டும்.

வல்லாட்சி அதிகார வகுப்புகளை எதிர்த்து மக்களின் விடுதலைக்கு மார்க்சியம் எந்த அளவு அடிப்படைத் தேவையுடையதோ, தமிழிய அறவுணர்வுக்குத் திருவள்ளுவம் எந்த அளவு தேவையானதோ, அந்த அளவு இந்தியப் பார்ப்பனிய எதிர்ப்புக்கும், சாதி ஒழிப்புக்கும் பெரியாரியமும், அம்பேத்கரியமும் கட்டாயத் தேவையானவையே. அவர்களின் கருத்துகளையும், செயல்பாடுகளையும் அறியாமல் முன்னெடுக்காமல் ஆரியப் பார்ப்பனிய எதிர்ப்பு, சாதி ஒழிப்பு இவற்றை நாம் கடந்திட முடியாது.

தமிழ்த் தேச விடுதலைக்கு, தமிழர்களின் உரிமைப் போராட்டங்களுக்குத் தடையாக இருக்கும் இந்தியத்தை எதிர்க்க வேண்டுமானால், பார்ப்பனியத்தை எதிர்க்க வேண்டுமானால், பெரியாரின் கருத்துகளும் போராட்டங்களும் பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களின் கருத்துகளும் போராட்டங்களும் தமிழர்களுக்குரிய போர்க்கருவிகள் என்று உணர்ந்துகொள்ளவும் கையிலெடுக்கப்படவும் வேண்டும்.

இந்தியப் பேராதிக்கத்தை, வல்லரசியச் சூறையாடல்களை, ஆரியப் பார்ப்பனியத்தை, சாதிய கொடுநெறியையெல்லாம் வீழ்த்திப் புதிய தமிழகம் காணவேண்டும் எனும் நோக்கமுடையோர் அனைவரையும் சிந்தாமல் சிதறாமல் கூட்டிட வேண்டுமானால் பாவலரேறு கொள்கை வழியிலான தமிழிய அற உணர்வாளர்களும், மார்க்சிய நெறி உணர்வாளர்களும், பெரியாரியக் கருத்தாளர்களும், அம்பேத்கரியக் கருத்தாளர்களும் ஓரணி திரண்டாக வேண்டிய நெருக்கடியான காலத்தில் உள்ளோம் என்பதை விளங்கியாக வேண்டும்.


இந்த அறிதலின்றி தங்களுக்குள் குத்துதல், குடைதல் செய்து ஒற்றுமையைக் குலைப்போரைத் தமிழ்த் தேச விடுதலை எழுச்சியில் அக்கறை அற்றோர் என்று சொல்லாமல் வேறு எப்படிச் சொல்வது?

பெரியாரை மட்டுமன்றி பாவலரேறு அவர்களையும் அவர்களின் அனைத்து நிகழ்வுகளையும் போராட்டங்களையும் இயங்கியல் வழிப்பட்ட குமுக அறிவியல் ஆய்வுடன் அறிய வேண்டுவதே சரியான பார்வை..

தமிழ்த்தேசம் காக்க உணர்வாளர்கள் அனைவரையும் ஒன்றிணைப்போம் வாருங்கள்..

---

# தோழர் இளங்கோவன் நம்மைவிட்டுப் பிரிந்தார்..



===========

பெரியாரியத் தொண்டரும், மார்க்சியக் கருத்தாளரும், தமிழ்த் தேசிய உணர்வாளருமாகிய அருமைத் தோழர் திருச்சி சு. இளங்கோவன் மறைவுற்ற செய்தி பெரும் அதிர்ச்சி அளிக்கிறது..

============

பாவலரேறு ஐயா அவர்களுடன் பழகி வந்தவர் மட்டுமன்றி, உலகத் தமிழின முன்னேற்றக் கழகத்தின் தொடக்க மாநாட்டின்(1981) பொருளாளராகப் பொறுப்பேற்றுச் செயல்பட்ட அருந்தொண்டர் எனப் பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களால் பாராட்டப் பெற்றவர்..

குளங்கோலும் கரையெனவே
குவிந்தவருங் கொடைகளெல்லாம்
ஒழுங்குசெய்து
களங்காண உழைத்தவருள்
கனிவுடனும் பணிவுடனும்
தொண்டுசெய்த
இளங்கோவன் எனும்பொருளர்
இணையில்லாப் பணிசெய்தார்;
தூய்மனத்தின்
வளங்கண்டு மிகமகிழ்ந்தோம்,
'மிகச்சிறந்த தொண்டர்' எனும்
பெரும்பேர் தந்தே! (1981)

============

அன்புத் தோழர் இளங்கோவன் அவர்களின் துணைவியாரும் உறவினர்களும் தோழர்களும் ஆறுதல் அடைய வேண்டுகிறோம்..

============

தோழர் இளங்கோவனுக்கு வீர வணக்கங்கள்..

**தோழர் இளங்கோவன் படத்திறப்பு நிகழ்ச்சி** தமிழக மக்கள் முன்னணியின் முன்னெடுப்பில் திருச்சியில் - தொடர்வண்டி நிலையத்தின் அருகில் உள்ள அருண் விடுதி சிற்றரங்கில் அக்தோபர் 12-ஆம் நாள் காரி(சனி)க் கிழமை மாலை 5 மணிக்கு நடைபெற உள்ளது.
ஆர்வலர்கள் தவறாது பங்கேற்கவும்.

வெளியீட்டுக் குழு : **பொழிலன், பேரா. த. செயராமன், முத்தமிழ், கண. குறிஞ்சி, நிலவழகன், பாவெல்**
**தமிழ்நாடு** (மாத இதழ்) 4/197 பல்லவன் நகர், 3 ஆவது தெரு, மேடவாக்கம், சென்னை 600100 கைப்பேசி 97108 75283, 91713 78874
(கீற்று இணையதளத்திலும் பார்க்கலாம்) மின்னஞ்சல் : thamizhnadu2051@gmail.com
அச்சிட்டோர் : மூகாம்பிகை அச்சகம், 24, வாணிபர் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை 600005